[illegible]

V.1. No.29 19 July 1928.

JL
[illegible],N28K4
N28·1,29
189012

Reg. No. M. 2324.

தனிப்பிரதி ரு. 0 3 0

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரு. 7 8 0
புற நாடு ... ... ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஞ ஜூலைமீ 19உ [No. 29.

OFFICE OF THE ... No. ... 20 NOV 1928 * MADRAS *

பொருளடக்கம்.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 561 |
| 2. | கார்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L. | 564 |
| 3. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L. | 567 |
| 4. | தமிழ்ப் பாடம் | 570 |
| 5. | கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L. | 572 |
| 6. | அகத்திய முனிவர் R. முத்தையர் | 575 |
| 7. | பால். "மான்சஸ்டர் கார்டியன்" | 577 |
| 8. | வர்த்தமானம் | 579 |

## கலா நிலயம்.

### சொல்வோரிற் கேட்பவ ரருமை III.

ஓம் என்ற வொருசொல் குறிக்கின்ற ஒற்றுமைப் பொருளையும், அப்பொருளிற்கோர் வைப்பாய புருடனின் இலக்கணத்தையும், இவ்விலக்கண முடையார் இருக்கப் பெறுவதால் அவர்களைக் காணுந்தோறும் மாந்தர் தம்பெருமையில் தாமே நம்புதற்கு இடம் உண்டாகுமாறும், அப்பெருமைதான் காலமும் இடமும் தம்மைக் கடந்தில எனும் ஆன்மானுபவ உணர்வே என்பதும், இதுகாறும் சிற்சிலசொற்களால் சுருங்கக் கூறிவந்த இரவீந்திரநாதர், இதன் மேல் நம்மைச்சுற்றி எங்கெங்கும் காண்கின்ற மனிதர் தொகுதியின் தன்மையைச் செப்புகின்றார்.

இம் மனிதர்களுடைய நிலையை ஒரு வாக்கியத்தில் உரைக்க வேண்டுமாயின், "அவர் நிலை ஆன்ம சூன்ய நிலை" என்பது அதற்கு ஏற்றதாகும். தனதொரு ஆன்மா சர்வமுமாய் எங்கும் வியாபித்திருக்கின்றது என்பதை நம்பாமல் மறுத்து விவகரிப்பதால் இதனை ஆன்ம சூன்ய நிலை என்றழைப்பது தகுதி யாயிற்று. இவ்வான்ம சூன்ய நிலைக்குரிய நினைவும் செயலும் யாவையெனக் கவி கூறுகின்ற வாக்கியங்கள் ஆழ்ந்த பொருளைத் தம்முள் அடக்கியுள.

தம்பெருமை உணராத மாக்களின் வாழ்க்கை, பிரபஞ்சானுபவம் எய்துவது போக்கிச், சந்தைக் கடை வியாபாரமாக முடிவது முதலும் மூலமுமாய குற்றம். இக்குற்றத்தைப் 'பொருளுக் கேற்ற விலை' என்னும் வர்த்தகஎண்ணத்தில் வாழ்க்கை கலைந்தழியும் கொடுமையிற் காண்கின்றோம். பொருளின் மதிப்பிற்குமேல் ஒரு காசு கொடுக்க மாட்டேன் என்பர். செய்த வேலைக்கு நிகரான கூலி கிடைக்கவேண்டு மென்பர். ஆதலால் இவருடைய இலக்ஷியத்தைத் தரம்பார்த்து அளக்கின்ற அளவை அதன் கூலியும் விலையுமே ஆகின்றன. இதனினுங்கேடு வேறுண்டோ. தக்க கூலிக்கு அல்லாது ஒருவேலையைச் செய்வதும் தக்க விலைக்கல்லாது ஒருபொருளைத் தருவதும் வர்த்தக அகராதியில் நஷ்டம் எனப்படும். இந்த நஷ்டம் என்ற செய்தியை நுணுகி ஆராய்ந்தால் அதனில் அடங்கியுள்ள கருத்தினது இழிவு தெரியவரும். ஒருவன் மற்றவனுக்கு ஒரு வேலை செய்தால் செய்த அவ்வேலையினளவு அவன் குறைவெய்தியாக எண்ணுவதே நஷ்டம் என்னும் கொள்கைக்கு ஆதாரமாகின்றது. அவ்விதமே, ஒருவன் ஒரு பொருளை மற்றவனுக்குக் கொடுத்தால், கொடுத்த அப்பொருளினளவு அவன் குறைவுற்ற எண்ண மில்லையெனில் நஷ்டம் எனும் கொள்கையு மில்லை. ஆதலால் சந்தைக்கடைக் குரிய சிந்தனைக்கு, ஒருவன் குறைவடையக் கூடுமெனும் கொள்கை அடிப்படையாயிருத்தல் வெளிப்படை. அண்டங்கள்யாவும் தன்னின் வேறல வென்றும், அலகிலாக் காலமெல்லாம் தனதே யென்றும் தேர்ந்துணர்தல் மாறுடப் பெருமையெனின், ஒருபொருள் போவதாலும் ஒருசெயல் செய்வதாலும் குறைவுதான் ஒருவன் அடையக் கூடுமோ! கூடுமென எண்ணுபவன் தன் நிறைவு எய்தியவனல்லன். அவன் தன் பெரு

மையை நம்பாது சிறுமையே பற்றித் தொடர்கின்றுதலால் தான் குறைதற் குரியவன் என்னும் நினைவால் பீடிக்கப்படுபவ னாகின்றான். இதுமாத்திரமன்று. அவன் எய்தியதாகக் கருதும் குறைவிற்கு ஈடுசெய்ய அவன் நாடும் வழியிலும் இழிவே தோன்றுகிறது. இடமும் காலமும் கடந்த ஆன்மா குறைதானென்று உற்றதானால் அதனிற்குக் கூலியும் விலையும் கொண்டு நிறைவெய்த நினைப்பதிலும் சிந்தனை அவ்வான்மாவிற்கு வேறு யாது உளது. ஆன்ம சூன்ய நிலையால் எய்தும் விபரீதம் இது. நமது இலக்ஷியங்களின் தாரதரங்களை விலையினளவாக மதித்தொழுகல் இவ் விபரீதங்களில் ஒன்று. அகிலாண்ட கோடிகளே நம்மின் அளவானபோது குறைவெங்கே! நிறைவெங்கே. வலதுகையை வந்து இடதுகை கழுவும் வேலைக்குக் கூலியாது? வலக்கை எடுத்தொரு பொருளை இடக்கையிலிட்டால், எக்கை இழந்து குறைந்தது, எக்கை பெற்று நிறைந்தது. தன திருகைகளையும் பிரித் துணர்வதையொக்கும், செய்த வேலைக்கும் கொடுத்த பொருளுக்கும் ஏற்ற பிரதிபலனையே இலக்ஷியமாகக் கொண்டு வாழ்தல். நானென்றும் நீயென்றும் எனதென்றும் நினதென்றும் பிரபஞ்சமயமான ஆன்ம வாழ்க்கையைப் பேதித்துப் பேசுதல், தன்னைக் காலென்றும் கையொன்றும் சேதித்துக் கருதுதலினும் வேறாகாது.

மானமென்பது பெருமையைக் காத்தல். அப்பெருமைக்கு மாறான செயலும் சொல்லும் மானமற்ற தன்மையின் காரியங்களாம். மனிதனின் பெருமை எதுவென நம் கவி முன்னர்க் கூறியிருத்தலை நினைக்குங்கால் கூலியும் விலையும் கொண்டாடிய இலக்ஷியம் மானமற்றதென் றுணர்தல் அருமையன்று. மானந்துடைக்கும் இவைகளைக் கொண்டு 'யானிது பெற்றேன், யான் இது ஈட்டினேன்' என்னும் நினைவால் தோற்றுகின்ற இறுமாப்பு எத்துணை எள்ளற் கொத்ததென இயம்பவேண்டா. எனின்,

> " சந்தைக்கடையில் பயில்கின்றபடி பொருளுக்கேற்ற விலையென்னும் அளவைக் கொண்டு நமது இலக்ஷியங்களின் பண்பின் தரத்தை மதித்திட வேண்டுமென்னும் விபரீத வாதத்தை ஸ்தாபிக்கின்ற ஓர் மானமற்ற இறுமாப்பை இந்நிலை (ஆன்ம சூன்ய நிலை) மனிதரில் விளைவிக்கின்றது."

என்று கூறியுள்ள இரவீந்திர நாதரின் கருத்தைத் தெளிந்துகொள்ளல் எளிதாம்.

இக்கடைவீதிக் கொள்கையன்றி, ஆன்ம சூன்ய சிந்தனை விளைவிக்கின்ற இறுமாப்பினால் ஸ்தாபிக்க முயல்கின்ற விபரீதவாதம் இன்னுமொன்றுளது. அவ்வாதம் யாதெனில், " மனிதன் தன் வாழ்நாள் முடியும் வரையிலும் திருந்திப் பண்படா மிருகமாகவே இருக்கவேண்டும்," என்பதேயாகும். இச்சிறு வாக்கியத்துள் இரவீந்திரநாதர் புகட்டியிருக்கின்ற பொருளத்தனையும் உணர்தற்கு இங்கு மற்றொன்று விரித்துரைத்தல் அவசியமாகின்றது :—

ஜீவராசி சாஸ்திரம் (Biology) வல்ல நிபுணர் மிருக வாழ்க்கையின் இரகசியங்களை மிகவும் நுண்ணிதாய் ஆராய்ந்து இருக்கின்றனர். அவ்வாராய்ச்சியின் பலனாய் ஜீவராசிகளின் ஜீவிய சரித்திரத்தைப் பற்றிய ஒரு கொள்கை மேனாட்டில் இக்காலம் நிலவி வருகின்றது. இக்கொள்கையைச் சாஸ்திர வாயிலாய் எழுபது வருடங்களுக்குமுன் முதல்முதல் ஸ்தாபிக்க முயன்றவர் சார்லஸ் டார்வின் (Charles Darwin) என்பவர் இவர் கொள்கைக்குப் பரிணாம வாதம் (Theory of Evolution) என்று பெயர். ஜீவகோடிகளெல்லாம் நாமிப்பொழுது நினைக்கின்றபடி தனித்தனி இனமாய்ச் சாதியாய் வகையாய்ப் புல்லென்றும் செடியென்றும் மரமென்றும் ஊர்வன நடப்பன பறப்பன வென்றும் ஆதியில் சிருஷ்டிக்கப் பட்டதில்லை என்பது இக்கொள்கையின் முடிவாகும். மற்று அப்பரிணாம வாதத்தின் செய்தி பின்வருமாறு:—

ஜீவவர்க்கங்களே இவ்வுலகத்தில்இல்லாதகாலம் ஒன்று இருந்தது. அதன்பிறகு ஒருகாலத்தில், ஆதியில் கரியோடு (Carbon) ஆக்ஸிஜின்(Oxygen) ஹைட்ரொஜின் (Hydrogen) நைட்ரொஜின் (Nitrogen) என்னும் மூன்று வாய்வுக்கள்சேர்ந்து ப்ரோடோபிளாஸம் (Protoplasm) என்று ஒரு வஸ்து உண்டாயிற்று. உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவிற்கும் சில குணங்கள் சிறப்பா யிருப்பதுபோலவே இந்தப் புரோடோபிளாஸம் என்னும் வஸ்துவிற்கும் சில குணங்கள் இருக்கின்றன. அவை தாம், சலனம் (motion) வளர்ச்சி (growth) சுவாஸம் (respiration) ஜீரணம் (digestion) இனம் ஈன்றல் (reproduction), சாவு (Death). எண்ணரிய கோடி கோடி வருடங்களுக்குமுன் இந்த ப்ரோடாபிளாஸ பிந்து வொன்று இவ்வுலகில் தோன்றியது (அது எவ்வாறு தோன்ற நேர்ந்த தென்பதைப் பற்றிய ஆராய்ச்சிகளையும் கூறப்புகின் விரியும் என விடுக்கின்றோம். நாம் மேற்கொண்ட விஷயத்தை விளக்குவதற்கு அது இங்கு அவசியமுமில்லை.) அந்தப் புரோடோபிளாஸம் என்னும் வஸ்து பார்வைக்குக் கோழிமுட்டையின் வெள்ளைக் கருவைப் போன்றிருக்கும். அவ்வகைத்தாய ப்ரோடோபிளாஸ பிந்து முன்சொன்ன குணங்களைக் காட்டலாயிற்று. இந்தக் குணங்களின் தொகுதியைத் தான் உயிர் என்பது. உயிர்ப்பிராணி, அசையும் வளரும் சுவாசம்விடும் உண்ணும் ஈனும் சாகும், என்று சொல்வதற்குப் பதிலாய்ப் புரோடோபிளாஸம் அக்காரியங்களைச் செய்யும் என்று சொன்னாலும் ஒன்றேதான். ஆதியில் இவ்வாறு உருவமற்றவோ ரணுவாய்க் கரி ஆக்ஸிஜின் ஹைட்ரொஜின் நைட்ரொஜின், என்னும் இவை தத்தமக்குரிய அளவில் சேர்ந்ததால் உண்டாகிய புரோடோபிளாஸமே உயிரின் ஆரம்பம். இந்தப் புரோடோபிளாஸம், ஒன்று இரண்டாய் அவ்விரண்டும் நான்காய், அந்நான்கும் எட்டாய், எட்டும் பதினாறாய், பதினாறு முப்பத்திரண்டாய், இவ்விதமாகவே கணக்கிற்கடங்காமல் பிரியலாயிற்று. பிரிந்த ஒவ்வொரு பாகத்திற்கும் வளர்ச்சி முதலிய குணங்களிருப்பதால் அவைகளும் அவ்வாறே பிரிந்து பிரிந்து பெருகலாயின.

முதலிலே இப்புரோடோபிளாஸம் உருவமும் உறுப்பும் அற்று நீரில் மிதக்கும் எண்ணைத் துளிபோல் இருந்தபோதிலும் அது, முன் கண்டவாறு பிரிந்து பிரிந்து வளர்கின்றகாலத்தில் தலைமுறைக்குத் தலைமுறை சிறிது சிறிதாக நிலைத்தவோர் உருவத்தைப் பெறலாயிற்று. இதுவுமல்லாமல், உயிர்ப்பிராணிகளுக்குரிய உண்ணல் உயிர்த்தல் அசைதல் ஈனல் போன்ற தொழில்களைச் செய்வதற்கு வெவ்வேறு உறுப்புக்களும் அந்தப் புரோடோபிளாஸத்தி னிடையே தோன்றத் தலைப்பட்டன. தோன்றிய இவ்வுறுப்புக்கள் எண்ணிறந்த தலைமுறை



களாகச் சிறிது சிறிதாய் முதிர்வனவாகி ஒரு தலைமுறைக்கு மறு தலைமுறை சிறப்பாக வெவ்வேறு தொழில்களைச் செய்வதற்கே உரியவாயின. இதன் முன் இந்தப் புரோடோபிளாஸமாக இருந்த பிராணியானது பொதுவாக எல்லாப் பாகமும் எல்லாத் தொழில்களும் செய்வதற்குக் கூடியதா யிருந்ததுபோக உறுப்பின் வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தது ஜீவராசி பரிணாமத்திற்கு ஆதாரமாயிற்று. இந்த வேற்றுமை ஒன்றற்கொன்று தோன்றுவது நூறு ஆயிரம் என்ற வருடங்களிலும் தலைமுறைகளிலுமல்ல. ஒரு சந்துவின் சந்ததி வேறொரு சந்துவின் உருவமாய் மாறுவதற்குப் பிரம்ம கல்பங்களைக்கொண்டு கணக்கிடவேண்டும்.

இவ்விதமாகப் பிராணிகள் அடைகின்ற வேற்றுமையால் மேன்மேலும் சிறப்புடைய சந்துக்களாய்ப் பரிணமித்து வருகையில் அவை தம் பரம்பரைத் தன்மையை மறப்பதில்லை. ஆதலால் ஒன்றின் சந்ததிகளெல்லாம் முற்றிலும் வேறாக மாறிவிடுகின்றனவென்று எண்ணப்படாது. சந்ததிகளில் வேறுபாடு அடையும் முகமாய்ச் சந்ததிக்குச் சந்ததி மாறிக்கொண்டே போவனவாய்ச் சில வளர, மற்றுஞ் சில தாம் இருக்கும் தன்மை மாறாது பெருகிக்கொண் டிருக்கும். மாறுபாட்டு வளர்ச்சியில் ஒவ்வொரு படியிலும் இந்த நிகழ்ச்சியைக் காணலாம். ஆதலால் ஜீவராசி பரிணாமத்தில் ஜந்துவர்க்கங்கள் கிளைகிளையாய்ப் பிரிந்துகொண்டே போகும். இப்பிரிவுகள் எத்தனையோ கோடி கோடி வருஷங்களாய் நடைபெற்றுவர இப்பொழுது தாவரங்களென்றும் ஜங்கம பிராணிகளென்றும் அவைகளுக்குள் இலக்ஷக்கணக்கான வர்க்க இன சாதி பேதங்களென்றும் விகல்பங்களையுடைய ஜீவராசிகள் இருப்பனவாயின. இப்படிப் பரிணமித்த புரோடோபிளாஸத்தின் தற்காலஎல்லை மனிதன். ஆனால் மனிதனோடு இப்பரிணாமம் முடிவு பெற்றிலது. இன்னும் கோடிகோடி ஆண்டுகளுக்கப்பால் மனிதனும் மாறுபாடடைந்து வேறோர் புதியஜீவவர்க்கம் ஏற்படாதும் ஏற்படலாம். ஆதியில் மனிதன்இருந்ததில்லை யென்றும் குரங்குகள்தான் இருந்தன வென்றும் அக்குரங்கின் சந்ததியே மாறி மாறி மனிதனாயினன் என்றும் யாவரும் வழங்குகின்ற சொற்களின் பொருள் இதுவே.

இதனின்று நாம் கருதவேண்டியது மிகவும் முக்கியமானது. முதலிலேயே சராசர பேதமான ஜீவராசிகளை எல்லாம் ஒரு கடவுள் சிருஷ்டித்ததில்லை யாயின், அவை முன்சொன்ன விதம் பலகோடி வகைகளாகப் புல்லென்றும் பூண்டென்றும்புழுவென்றும் மீனென்றும் ஊர்வனவென்றும் பறப்பனவென்றும் விலங்குகளென்றும் மனிதனென்றும் பரிணமித்து வருவதின் காரணமென்ன? பரம்பரைத் தொடர்போடேகூட வேற்றுமையும் இடையிடையே தோன்றிச் சந்ததி மாறுவதேன்? இம்மாறுபாடு தானாக ஜந்துக்களின் சுயசக்தியால் ஏற்படுவதோ, அல்லது மேலான வொரு சக்தி இருந்து மாற்றி வைப்பதோ? இன்னபல கேள்விகள் முன்னிங்குச் சொன்னவைகளிலிருந்து யாவர் மனத்திலும் பிறப்பது இயல்பு.

ஜீவசரித்திர சாஸ்திரநிபுணர் பிராணிகளின் வாழ்க்கையை உற்றுநோக்கி ஆராய்ந்து சிலமுடிவுகள் அடைந்திருக்கின்றனர். ஒவ்வொரு பிராணியும் பிறந்து உண்டு வளர்வது அதன் இனத்தை விருத்தி பண்ணுவதற்கேயாம். ஆதலால் [illegible] அழிவதுபோக விஞ்சிநிற்கக் கூடிய அளவு சந்ததி ஈன்ற பிறகு அதன் காரியம் முடிந்து விடுகின்றது. பிறந்து உண்டு வளர்வது ஆண்பெண் புணர்ச்சிக்குத் தகுதியாகும்படி முதிர்வதன் பொருட்டே. ஆண் பெண் என்ற காமம் பிறப்பது அவை புணர்ந்து கருக்கொள்வதற்கு. ஈன்ற குட்டியை, அது தன்னைத் தான் காத்துக்கொள்ளும் வரையில், தாயும் தந்தையும் ஊட்டிப் பாதுகாப்பது இனம் அழியாது தொடர்வதன் பொருட்டாகும். ஆதலால், தன்னினம் வளர்த்தல் (propogation of the Species) ஒவ்வொரு பிராணிக்கும் முதல் கடமை யாகின்றது. இக் கடமையை நிறைவேற்ற ஒவ்வொரு பிராணியும் உணவு பெற்று வளர்தல் அவசியம். ஒன்றை ஒன்று தின்றாலன்றி உணவில்லை எனவே ஒரு இனத்தைச் சேர்ந்த ஜந்து, தன்னினத்தையோ வேறுஇனப் பிராணிகளையோ தின்னாது எவ்வாறு முடியும். ஒவ்வொரு ஜந்துவும் தன்னின் மெலிந்ததைக் கொன்றுதின்னக் கூடியதாயும் தன்னின் வலுத்ததால் கொல்லப்படக் கூடியதாயும் இருக்கின்றது. ஆகையால், ஒவ்வொன்றிற்கும் கொல்லப்படாமல் காத்துக் கொள்ளுவதற்கு இயன்ற தற்காப்புச் சாதனங்களும், மற்றவற்றைத்தான் கொல்வதற்கு வேண்டிய சண்டைச் சாதனங்களும் இரண்டும் ஒருங்கே அமைந்தாலன்றி அதுவும் அதன் இனமும் நாளடைவில்இல்லாமலே அழிந்துவிடுவது நிச்சயம். கொசுவைச் சிலந்தியும், சிலந்தியைப் பல்லியும் தின்னும். எனவே,சிலந்தி கொசுவைப் பிடிக்கவும் பல்லிக்கு அகப்படாமலும் வலைபின்னி அதன் நடுவே இருக்கின்றது. இருந்தாலென்ன. குருவி கண்டால் கொத்திச் செல்லும். இனி அக்குருவி காணாதபடி சிலந்திகள் பல, தாம் வசிக்கும் செடியின் நிறத்தைப்பெற்றுச் செடியோடு செடியாய்த் தோன்றுவதாகின்றது. அக்குருவிக்கோ எமன் பருந்து உண்டு. தவளை பூச்சிகளைத்தின்னும். அப்பூச்சிகளைப் பிடிப்பதற்கு வேண்டிய சாதனங்களாய் நீண்ட நாக்கு, தத்திப்பாய்தல் முதலியன தவளைக்கிருக்கின்றன. பூச்சிகள் சிலவற்றிற்குத் தவளைக்கு அகப்படாதபடி பறந்து தப்ப இறகுண்டு. இத்தவளையையோ பாம்பு பிடிக்கும். வருவது தெரியாமல் கல்லும் முள்ளும் நுழைந்து வருகின்ற சாதனம் பாம்பிற்குண்டு. தவளைகளோ சில பாம்பிற் ககப்படாமல் மரமேறியும் சில நீரில் பாய்ந்தும் தம்மைக் காத்துக்கொள்ளும். இனி இப் பாம்பைப் பிடிக்க மயில் முதலிய பறவைகள் உண்டு. ஆதலால் பாம்புகள் பகலெல்லாம் வளையில் பதுங்கியிருந்து, பறவைகள் ஒடுங்கியபின் இரவில் வெளிவந்து சஞ்சரிக்கும் சக்தி பெற்றிருக்கின்றன. பக்ஷிகளை நரி முதலியன பிடித்துவிடும். அவைகளுக்கு அகப்படாமல் பறக்க இவைகளுக்கு இறகு உளது. சுருங்கச் சொல்லில், எந்த ஜந்துவைக் கருதினாலும் முன்னும் பின்னுமாய்த் தொடர்கின்ற இவ்விதச் சங்கிலியை இயற்கையில் காணலாம்.

ஜீவசந்துக்களின் தினசரி சரித்திரம் இவ்வாறு நிகழ்வதால், உலகத்திலே ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நிமிடமும் ஒருபெரும் போராட்டம் நடைபெற்று வருகின்றதென்பது எளிதில் விளங்கும். இதனை ஜீவராசி சாஸ்திரிகள் வாழ்க்கைப்போர் (Struggle for Existence) என்று அழைப்பர். இந்தப்போரிற்கு ஒவ்வொரு பிராணியும் இடைவிடாது ஆயத்தமாக முயன்று வருவது இன்றியமையாத தாகின்றது. இல்லையேல் அதுதோற்றழியும். இவ்வாறு ஆயத்தமாகித் தான் மற்றதற்கு இரையாகாமலும் மற்றவை தனக்கு இரையாகவும் வாழ்வதற்குத் தன்னைத் தகுதிஆக்கிக் கொள்கின்றது. இதனைத் தகுதியிற் றேர்தல் (adaptation) என்பர் இவ்விதத் தகுதியாம்படி முயல்வதாற்றான், சந்ததிக்குச் சந்ததி அதனதன் அவசியத்திற்கு ஏற்றபடி வேறுபாடு ஜீவராசிகள் அடையலாயின. ஆனால் ஒவ்வொன்று இத்தகுதியில் தேர்ச்சியடையும், ஒவ்வொன்று அடையாமற் போகும். எனின், தேர்ந்தவையே மிஞ்சிநிற்றலும் தேராதவை அழிந்துபோதலும் நேர்கின்றன. ஆதலால் எப்பிராணியும் தகுதி

யின் வலிமை உடைத்தாயின் வாழ்வதும், அத்தகுதி பெருதன முன்னதற்கு இரையாவதும் இயற்கையே. எது வாழ்தற்குரியது எது அழிதற்குரியது என்று ஏற்படுகின்ற ஜீவசரித்திரவிதியை இயற்கைத்தேர்ச்சி (Natural Selection) எனக்கூறுவர். இந்த இயற்கைத் தேர்ச்சி விதியின்படி பார்த்தால் மெலியன வலியவற்றால் நலியப்பட்டு நசித்தல் சாதாரண தர்மமாகின்றது. ஆதலால், "தகுதியிற் சிறந்தன மிஞ்சிநிற்றல், இளைத்தன அழிதல்" (The survival of the fittest; The Weaker go to the wall) என்னும் விதியை அனுசரித்து ஜீவராசிகள் அனைத்தும் தம் வாழ்க்கையை நடத்துவனவாகி, மறமே அறம் (Might is Right) என்ற கொள்கையை விட்டுவிலகினால் பிழைத்தற்கு வேறு வழியில்லை என்றவோர் இரகசியத்தைப் பின்பற்றுகின்றன. எல்லாம் பிழைத்திருக்கவே போராடியவண்ணமாயிருப்பதன்றி ஒன்றும் வாழ்வதில்லை, ஜீவராசிகள் பரிணமிக்கின்ற தவ்வளவும் (Evolution) பிழைப்புப் போரிற்குத் தம்மைத் தகுதியாக்கிக்கொள்ளும் பொருட்டே யாம். சற்றயர்ந்தால் செத்தது. அயர்ந்ததை அழித்துத்தின்று அயராத ஜந்து வளர்வதே வாழ்வின் முறை.

நம் கட்டுரையில் இதுகாறும் இடைப்பிறவரல். ஜீவராசிகளினிடையே நடக்கும் இவ்விதிகளைத் தற்காலம் மனிதர்மாட்டும் அனுசரித்துச் சிலர் விவகரிக்கின்ற கொடுமையை இரவீந்தரநாதர் கடிகின்றார். மேலும் ஜீவசரித்திர சாஸ்திரிகளுக்குள்ளும் குட்டி வேதாந்திகளே, வாழ்க்கைப் போர் கொள்கையைப் பாராட்டி அப்போராட்டத்தின் நிமித்தம் 'தகுதியிற்றேர்தல்' 'இயற்கைத் தேர்ச்சி,' 'தக்கன மிஞ்சிநிற்பதே முறை' என்பனபோல் ஏற்பட்டிருக்கும் விதிகளே வாய்மையென்றும், அவைகளின்றி ஜீவராசிகள் பரிணமித்தற்கு வேறெவ்வித உதவியும் வேண்டா வென்றும் வாதிப்பர். மேனாட்டுச் சாஸ்திர நிபுணர்களிற் சிலர் வாலஸ் ரஸ்ஸல் (Wallace Russel) என்பவரைப் போல் சந்துக்கள் சந்ததி வரிசையில் வேறு பாடடைந்து பரிணமிப்பதற்கு இவ்விதிகள் மாத்திரமே போதா வென்று சங்கையுற்று, இதற்கும் மேலானவோர் அறிவு அல்லது சக்தி இருந்தே ஜீவகோடிகளின் சரித்திரத்தை நடத்திவைத்தல் வேண்டுமென அனுமானம் செய்துளர்.

தற்கால அரசியல்வாதங்களிலும் தனதாய முறைகளிலும் வர்த்தகத்துறைகளிலும் மற்றெவ்வித ஜனசமூக விவகாரத்திலும், இளைத்தவன் நசித்தல் இன்றியமையாத தென்றும், வலுத்தவன் நலிதலும் நேர்ந்தே தீரவேண்டு மென்றும், நினைத்து அதற்கேற்ப யாவரும் தத்தம் சுய பாதுகாப்பே கண்ணுங்கருத்துமாய்க் கொண்டிருந்து போராட்டத்திற்குத் தகுதியுள்ளவர்களாய்த் தம்மை ஆக்கிக் கொள்வது அவசியம் என்னு மிக்கொள்கையே அடிப்படையாக இருக்கக் காண்கின்றோம். மிருகங்களின் வாழ்க்கைக்கு ஏற்பட்ட இவ்விதிகளை மனிதன், தனக்கு வயிறு மாத்திரமல்லாமல், பகுத்தறிவும் ஆன்மாவும் உள வென்பதை மறந்து, அப்படியே எடுத்து அமைத்துக் கொள்வது விபரீதம். ஆன்ம சூன்ய நிலையால் ஏற்படுவது இது. இக்கருத்துக்களை அடக்கியே நம் கவி சிரேஷ்டர் இரவீந்திரநாதர்,

> மனிதனுக்குள் அறியமாட்டாதிருக்கும் அகண்டத்தைத் தெரியும்படி தோற்றுவிக்க உதவுவது இச்சொல். அன்றன்று உயிரிற்கு வேண்டிய ஊதியத்தைச் சம்பாதிப்பதோடு தம்முயற்சி நின்று விடும்படி பிரகிருதி மிருகங்களைக் கட்டாயப் படுத்துகின்றது. இவ்வித ஜீவனம் என்னும் குறுகிய வேலையினின்று மனிதரை விடுவித்து அகன்றவோர் வாழ்வாகிய சுதந்தரத்தை எய்துவித்தது இச்சொல்லே யாகும். சரீரத்தின் சுய பாதுகாப்பிற்கியன்ற உலகத்திற் காணும் மங்கிய வெளிச்சம் இரவின் உலகத்திற்கே ஏற்றது; மனிதரோ இரவில் திரியும் சந்துக்களல்லர்.

என்று ஓர் இடத்தில் எடுத்துக் காட்டியும், மற்றோரிடத்தில்,

> மனிதன் தன் வாழ்நாள் முடியும் வரையிலும் திருந்திப் பண்படா மிருகமாகவே இருக்க வேண்டும் என்னும்..............................விபரீத வாதத்தை ஸ்தாபிக்கின்ற ஓர் மானமற்ற இறுமாப்பை இந்நிலை (ஆன்ம சூன்யநிலை) மனிதரில் விளைவிக்கின்றது.

என நினைப்பூட்டியும் வைக்கின்றார். மனிதனை மிருகத்தினின்று திருத்திப் பண்படச் செய்து வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும் பெரு வழக்கிற்கு இழுக்குள தன்மையைத் தோற்றுவிப்பது அவ்வொரு சொல் என்பதைச் செப்பவும் வேண்டுமோ.

(தொடரும்)

காந்திமதி என்னும்

# காந்தாரநாட்டுக் கட்டழகி.

(553-வது பக்கத் தொடர்ச்சி)

## 26. மாயையின் சாயை.

மந்தாகினிப் பெருமாட்டி வைகறையாமந் துயில் நீங்கித் துநீராடிக் கற்பின் தெய்வமே கோலங்கொண்டதென பூணுதி ஆடைகள் ஆய்ந்தணிந்து கடவுளைப் பலபட வாழ்த்தித் தொழுதபின், மேனிலைமாடச் சாளரத் தெற்றியின்கண், அவள்குழலை அகிலால் புலர்த்தினளாய்க் கயற்கண்ணி அருகிருக்க, அமர்ந்து கண்ணிணை கதியின் கதிக்கும், மனதைத் தன் மணாளனுக்கும் அளித்துத் தோழி வினவிய உரைகளுக்கு வாயால் மறுமொழி தந்திருந்தாள். தினகரன் எழுகின்ற வைபவத்தை அன்றே புதிதாய்க் கண்டனபோல் தருக்களினிடையே பறவைகள் தம்முள் பாராட்டிக் கூவின. கம்புள் சில துனிச்சினை நின்று செங்கதிர்ச் செல்வனைத் தஞ்சிரஞ்சாய்த்துச் சிறகாட்டி வரவழைத்தன. கடலோ இரவெலாம் அலைந்ததால் உயிர்ப்பும் ஒலியும் சோரத் தேங்கி இருந்தது.

காந்திமதி வருவாளென்று முதல்நாள் சந்திரசேகரர் தெரிவிக்கும் பொருட்டு அனுப்பிய கடிதம் அற்றை இரவில் மந்தாகினி துயில்கொள்ளச் சென்றபிறகே



சேர்ந்ததாகையால் அதைக் கயற்கண்ணி இப்பொழுதே மந்தாகினியிடம் கொடுத்தாள். மந்தாகினியும் அதனை ஓதி மிக்கதோர் உவகை எய்தினள். "தோழி, கட்டழகியின் கீர்த்தியை யான் கேட்டுளேன். என்னுதாரவை நாடி அவள் வருகின்றாளென்பதை நினைக்க எனக்குப் பெருமை தருகின்றது," என்றாள். இளவரசன் வருமத்தினமே காந்திமதியும் வருவது முற்றிலும் காகதாலியமேயாய் இருக்குமோ வெனும் சந்தேகம் கயற்கண்ணியின் மனதில் சிறிது பிறந்ததெனினும், அப்போது அவளதனைத் தோற்றுவிக்க வில்லை. தலைவியும் பாங்கியும் அங்குத் தம்முள் பேசியிருந்த வார்த்தைகள் பொதுவகையில் பலபட இருந்தனவேயன்றி நெடுநாள் அகன்றுநின்ற நாயகன் அன்று வருவதைப்பற்றிப் பெரிதுங் குறித்தில.

வைத்தகண் வாங்காமல் ஆற்றையே பார்த்திருந்த மந்தாகினிக்குத் தூரத்தில் சித்ராங்கனது படகு தென்பட்டதெனினும், இன்னபடி முதலில்படகென் றுவஞ்சித்துப் பிறகு வரவரச் சுருங்கிளையுமாய் அகன்றபொய்த் தோற்றம்பலவற்றுள் இதுவுமொன்றேஎனநினைத்தனள். சுருகெனமதித்த அதுமெல்லமெல்லவோர் ஓடத்தின்உருவம் எய்தவே, படபடக்கும் இவளுள்ளம்போல் துடுப்படித்து இறங்குத் துறைநண்ணி நின்றது. சிலிர்த்த மெய்யினள், மழலைச்சொல் தடுமாறும் மணிவாயினள், தோழியைத் தழுவிப் "பாரடி, வந்தனன் என்னருந் தலைமகன். வாரானென்று புகன்றாயே நீ, வந்தனன் பார். எனதன்ப னென்னை அறவே கைவிட மாட்டானடீ" என்று மந்தாகினி பன்னலுறக் கயற்கண்ணி, "அவர் வர மாட்டாரென்றென்றும் புகன்றிலேனே...அன்னாய், நின்னுடலேன் இங்ஙனம் நடுங்குகின்றது. உனது உயிரே உடல்விட்டு அவர்பால் மூந்த முயல்கின்றதோ?" என்றதற்கு மந்தாகினி, "புத்துயிர் பெறுகின்றேன். அது புகுவதால் துளங்குமென் மெய்" என்று அவிழ்ந்தலைந்த கூந்தலைக் கோதி முடிந்து படகினின் றிறங்குவோர் மாட்டுத் தன் நாட்டத்தைச் செலுத்தினள். இளவரசன் நாவாயின் றிறங்கி மாளிகைமுகமாய் வருவது காணக் காணத் தனது உவகையின் பாரத்தை முழுவதும் ஒருங்கே தாங்குதற்குத் தரை ஆற்றாதென நினைத்தவள் போலத் தன்னிரு கால்களையும் மாற்றிமாற்றி மிதிப்பதும் சிறிது உயர்த்துவதுமாய மந்தாகினி "கண்ணே, கயற்கண்ணி, எனதன்புடைய பெருவள்ளல் வந்ததும் யான் ஏதடி செய்வது—யாரடி, முதலில் பேசுவது முறை—இந்நாள்காறும் தாழ்ந்ததற்கு நான் கடிந்துரைப்பது தகுதியோ, மற்று இன்றேனும் வந்தானே யென்று பாராட்டிப் புகழுவோ..." என்று இவ்வாறு பரிசையறை வாயிலில் புத்தகம் திறக்கும் தற்கால வித்தியார்த்திகளென்ன, அங்ஙனே அகப்பொருளிலக்கணம் கற்கப் புகுகையில், கயற்கண்ணி மினாநண்ணி வருவோரைக் காட்டி, "என்ன, காந்திமதியையும் கூடவேயோ அழைத்து வருகின்றார்," என வியந்தாள். மந்தாகினியும் அவள் காட்டிய கைவழி நோக்க, நங்கை யொருத்தி உடன் வருவதைக்கண்டு மனஞ்சலித்துப் பின்னும் பார்த்து, "அன்றடி, பேதாய் அன்று. எத்தலைவன் தனக்குத் தாசாதன செய்யான். இவள் கட்டழகி பட்டத்திற் குரியவளே யாயினும் காந்திமதி யல்லள். உற்றுப் பாரடி, யாவளோ பாண்மக ளொருத்தி. என்பால் வாயில்வேண்ட அவளை அழைத்து வருகின்றான், பின்னிது பார்" என்று கூறித் தன்னுரைக்குத் தானே சிரித்தாள்.

சிரித்தவ ளுள்ளத்தில் இப்பொழுதோர் கள்ளக் துன்னியது. "இத்தனை நாள் அவன் என்னைக் கலங்கவைத்தானே, கயற்கண்ணி, நான்தான் இன்று அவனைச் சிறிது கலங்கக் காணின் என்?" என்றனள்.

"என்னசெய்யப் போகின்றாய்?" என்றனள் கயற்கண்ணி.

"வேறொன்றுமில்லை. நீ பாங்கியர் யாவரையும் அழைத்துக்கொண்டு மாளிகையின் பின் வழியால் வெளியே போய்விடு. நானும் கீழிருக்கும் பூசையறையிற் போய் ஒளிந்துகொள்கிறேன். தாதிமாத்திரம் தங்கி இருந்து, நானிங்கிருந்து நேற்றே போய்விட்டதாகக் கோமற்குக் கூறட்டும். அவன் வந்து இவ்வறையிற்றான் தங்குவான். நான் மெள்ள அந்தரங்க வழியாய்ப் பின்னெய்தி என்தலைவன் யாதுசெய்கின்றான் என்றுபார்ப்பேன். வாராத காலமெல்லாம் என்னை வருத்தியவன் வந்தபின் நானில்லாது தான் வருந்தக் காணுவேன் சிறிது நேரம். என்ன நினைக்கின்றாய்.?"

இந்த விளையாட்டைத் தடுத்துக் கூறுவதோ அல்லது அற்கு உடன்படுவதோ எனக் கயற்கண்ணி சிந்திப்பதற்குள், இளவரசன் மாளிகைநுழையும் வாயில் இழுவைப் பாலத்தருகு வந்துவிட்டான். ஆகையாலவள் ஒன்றும் பேசாமலே ஓடிவிட்டாள். மந்தாகினியும் விரைவுடன் கீழிறங்கித் தன் தாதியைக் கூப்பிட்டு ஏதோ சொல்லித் தன் பூசையறைக்குள் மறைந்தனள்.

சித்ராங்கனும் அவனைச் சேர்ந்தவர்களும் மாளிகையினுள்ளெய்த அத்தாதி, முன்னிரவே தன் தலைவி அம்மனை விட்டகன்று தந்தை கஜேந்திரவிம்மரிடம் சென்றிருப்பதாகத் தெரிவித்தாள். இதுகேட்ட தாமோதரன், தான் செய்த சூழ்ச்சி பிழைக்காததையும், மனுட இயற்கையைத்தான் ஆராய்ந்த நுட்பம் பொய்க்காததையும் எடுத்துக் காட்டித் தற்புகழ்ச்சி பேசியதற்கோ அளவில்லை. "ஆயின், கஜேந்திரவிம்மரிடமே சென்று வேலை தேடிக்கொள்ளச் சொல்லி இப் பெண்ணை அனுப்பிவிடலாமே?" என்று கேட்டான் நரபாலன். மாதவியின் நெஞ்சம் பதைத்தது. சித்ராங்கனோ இச்சொற்களைச் செவியேற்காமல், மாதவியைத் தாதியிடம் விட்டுவிட்டுத் மேனிலை மாடத்தை அடைந்தான். மந்தாகினியைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் இசையானாய் இரத்தினபுரியினின்று புறப்பட்ட சித்ராங்கனிற்கு அவளங்கு அக்காலம் இருந்தா லாகாதா வென்னுமோர் எண்ணம் அவன் மனதின் மூலையில் உதிக்க ஆரம்பித்தது. படகில் நிகழ்ந்த தவ்வளவும் அவனுக்குக் கனவேயாய்த் தோன்ற இப்பொழுதவன் தூக்கம் தெளியாதவன் போன்றிருந்தான் பலகணியூடே பார்த்திருந்த நரபாலன், "சித்ராங்கா, கட்டழகியின் படகும் வந்து விட்டது," என்றனன்.

"என்னை என்ன செய்யச் சொல்கின்றாய்" என்று சினந்தனன் இளவரசன்.

"அரசே, அவளைச் சிறு கூத்தொன்று ஆட்டிவைக்கலாம் என்று தோன்றுகிறது. உனது அகமுடையாளோ, புருடன் வரவுகேட்கப் பறந்தோடி விட்டனள் .........ஆதலால்........."

"நரபாலா, இத்தருணம் நீ யுனது மற்றொரு கையையும் செருகுகின்றாய்—என்பத்தினியை நீபழித்துப் பேச இடந்தரேன்"

"எத்தனை நாளாக இந்த அபிமானம்!...நல்லது, காந்திமதி உன் பத்தினியைக் காண வருவதால், நீயே தான் அப்பத்தினியாக இருந்தாலோ!"

"நானே என் மனைவியாய் இருப்பதா?...விளங்கவில்லை."

"காம இரவிகளுய நீ யேனே அப்பாண்மகளைக் கண்டபின் இப்படி மழுங்கிப்போனுய்! மாந்தாகினியின் ஆடை சில இங்கிருக்கின்றன. அதனிலொன்றணிந்து நீ இவ்விடமே படுத்திரு.இந்த வைத்தியன் தாதிவேடம் பூண்டு காந்தியை உன்பால் அழைத்து வருவான்."

இந்நூதனக் கூத்தைக் கேட்டதும் சித்ராங்கனிற்குப் பழையவழக்க வாசனையால் சிறிது ஊக்கம் உண்டாயிற்று.இதற்கு உடன்பட்டான். காந்திமதி மாளிகை புகுவதன்முன் உடல் இரண்டாய் மடிந்த அப்போலிக்கிழவி எதிர் சென்று அவளை வரவேற்று, "மகளே, வா, உன் வரவு நல்வரவாகுக. துன்பத்துளாழ்ந்த எம்பெருமாட்டிக்கு நீ தக்க துணையாவாய். குழந்தாய், முகத்தழகு உனது அகத்திற்கு மிருக்குமாயின், நினக்கு நிகர் நங்கை எவள்" என்று சொல்லிக்கொண்டே இளவரசனிருந்த அறைக்குள் கொணர்ந்து விட்டாள். அவ்விடத்தில் புடவையொன்றைச் சுற்றிக்கொண்டு சயனத்திலமர்ந்திருந்த சித்ராங்கன் மெள்ளத் திரும்பிப்பார்த்து, "அந்தப் பெண் இவள் தானே, தாதீ, நம்மருகு வரச் சொல்" என்றான். பொய்த் தாதியும் காந்தியை இளவரசனது அயலில் நிறுத்தி வந்தனமளிக்கவைத்து மெல்லவே அவ்வறைவிட் டகன்று போயினள். காந்திமதி பணிவுடன் வணங்கிநிற்கச் சித்ராங்கன் மெல்லிய குரலால், "காந்தி, பெரும்பேர் பெற்றும் சிறுவிதி சேர்ந்த ஓர் பிறவியை என்னிற் காண்பாய்" என்று சொல்லிக்கொண்டே எழுந்து காந்தியின் கையைப்பிடித்தான். ஆண்மகனொருவன் தன்னைத் தீண்டக் கண்டனள் காந்திமதி, மனமலங்கி ஓலமிட, "சீ ,பேதாய், சும்மா விரு. நான்தான் காந்தாரநாட்டு இளவரசன்" என்றனன் இவன்.

இருந்த நிலை இக்கட்டுடையதேனும் இளவரசன் என்றபின் உள்ளம் ஒரு சிறிது தேறினளாய்க் காந்தி, "அரசே, புரியப்புகுந்த பகடியும் முடிவாயிற்றல்லவா. விளையாட்டொழிந்து என் கையை இனி விட்டுவிட வேண்டுகின்றேன்" எனத் தன்னமைதி வழுவாமல் இசைத்தனள்.

"என் கை யகப்பட்ட அருங்கிளியே. மாறுதல் தவிர்ப்பாய். அஞ்சுவதேன் நீ என்பால்?"

"அஞ்சவில்லையே, அரசே, யான், மாறவும் இல்லையே.........பதறிச் செய்யும் இக் காரியத்திற்குத் தேவரீர் பின்னுள் மனம் பெரிதும் வருந்துவீர்"

"கொடியாய், நெடுநாள் எனதுணர்வைக் கொள்ளையிற் பறித்த வுன்னைச் சிறிதளவு நானிங்குச் சிறை வைத்தால் தகாதோ!"

"இரத்தினபுரி வீதியில் இத்தகைய மென் மொழிகளைப் பேசுவதுபோல் இத்தனியிடத்தில் பேசுவது தக்கதன்று—கொடியன.''

"விடமாட்டே னென்றால், நீ என்செய வல்லாய்? யாரிடம் இங்கு முறையிடுவாய்? உனதுதவிக்கு வர இங்கு யாருளர்?"

"அண்ணலே, கையை விடு. உன் பழியை உன்னிடமே முறையிடுகின்றேன், கேள்—சித்ராங்கன் இழைக்கும் குற்றத்தைக் காந்தாரநாட்டு இளவரசன்—பெண் வேடம் பூண்டிருந்தாலும்—கடிந்தகற்றுமற்றுன் இருப்பானே!"

இச்சிறுவசை இளவரசனின் மார்பில் தைத்தது. நரபாலன் தண்டா, வேண்டா வெறுப்பாய்த் துவக்கிய இச்சிறு நாடகத்தை நடத்த அவன் இனி இசையவில்லை. "காந்திமதி, என் புன்செயல் பொறுத்தி. மனம்போன போக்கெல்லாம் ஆடித்திரிந்த வென்னை உன்போன்ற உத்தமிகளாலன்றிப் பிறரால் பொறுப்பது எளிதன்று. என்செய்வேன். எனதரும் விதியொருபுறமும், உற்றார்போல் வழங்கும் பாதகர் செய்கின்ற சதி மறுபுறமும் இழுத்தென்னை இந்நிலைக்குக் கொணர்ந்தன. என் காதலி மாலினியைவிட்டு இக்கொடிய இராஜ்ய தந்திரிகள் என் வாழ்க்கையைப் பிரித்துவிட்டனர். பேதை மடவாள் கஜேந்திரவிம்மனின் அருமைப் புதல்வியினது வாழ்வும் அதனால் பாழாயிற்று. என் விருப்பு வீணுப்போயதால் பிறரின் விருப்பத்தைப் பேணுது இதுகாறும் நடக்கலாயினேன். இந்நாள் தொட்டு என் நோக்கமும் வாழ்க்கையும் மாறுதலடைகின்றன. மெய்வரு போகம்போக்கி உள்ளமே நைந்துருகவைக்கின்ற பாண்மகள் ஒருத்தி கண்டேன். கண்டவர் கருத்தில் புத்துயிர் புகட்டும் நின்னைக் காண்கின்றேன். இனியாரைத்தான் காண இருக்கின்றேனோ அறிகிலேனே!" என இவ்வாறு சித்ராங்கன் கழிவிரக்கம் பாராட்டி நெடிதியம்பினன்.

சித்ராங்கன் இழைக்க நினைத்த தீங்கினால் தனது மானநிலை அழியுமெனும் அச்சம் காந்திமதியைப் பெரிதும் வருத்தியதெனினும், தருமத்திற்கோர் கொழுகொம்புபோ லாகவேண்டிய அரசன் அதனை வேர் பறித்துத் தனக்கும் தன்குலத்திற்கும் பெருமாசு உண்டாகும் வண்ணம் நெறிபிறழ்ந்து ஒழுகுகின்றானே என்னும் இரக்கம் அதனினும் மேம்பட அவள்மனம் வெந்திருத்தலால், சித்ராங்கன் கூறிய இச்சொற்கள் அப்புண்ணைத் தணிக்கும் மருந்தென ஆயின. "நின் பெருமை இத்துணையாக, வேந்தே, நீ, எத்தகைக் காரியம் செய்யப் புகுந்தனை. நின்தொல்குல முன்னையோர் ஆற்றிய தவமெலாந் திரண்டிடை நின்று இன்றுன் பேர் காத்தது. வாழி மன்னா வாழி, விடையெனக் களித்தி" என்று அவள் வேண்ட, இளவரசன் நரபாலனை யழைத்து, "நம்முடன்வந்த பாண்மகள் எங்கிருக்கின்றாள். அவளோ டிவளையுஞ் சேர்த்துவிடு. பிறகு அவளூர்க் கனுப்புவோம். நாம் வந்தகாரியமும் இதனோடு முடிந்தது"என விதித்தனன். காந்திமதி குவிந்த கையளாய்ச் சிரமிறைஞ்சி யவ்வறைவிட்டு நரபாலனோடகன்றனள்.

நரபாலன் அவளைப் பாண்மகளருகே விட்டு மீண்டதும் "என்ன, சித்ராங்கா, காந்தாரநாட்டுக் கட்டழகியை இவ்வளவு விரைவினிற் பிரிவதேன்? சயமடைந்தவர் எய்துஞ் சலிப்பு இதுவேயோ?" எனச்சொல்லியவாங்கே இளவரசனுக் கருகு சார்ந்தனன்.

"இக்கருமத்தில் வெற்றியுமில்லை, தோல்வியுமில்லை. பெண் இவள் என்பால் காதல்கூர்ந்திலள். அன்னாள் கற்பிற்கோர் குறையிழைக்க எனக்கும் மனம்வந்திலது."

"அகலிகையின் குலத்தில்வந்த ஒரு பத்தினி இவளேயோ?" என்று நரபாலன் சொல்லியதைச் செவியுட்கொள்ளாது சித்ராங்கன், "பரிகசம் போதுமையா, பகற்போதாகின்றது. போனகம் வருதற்கொத்த வழி நோக்குதல் நலம். உண்டிமுடிந்தபின் நம் நகர் மீள்வோம்" என்று கூறினான். இதற்குப் பதிலுரைக்காதகன்ற நரபாலனது வாயிற் சிரிப்பும் கண்ணிற்கொடுமையும் நிலவநோக்கி இளவரசன் சிந்தனையுள் ஆழ்ந்தான்.

சித்ராங்கன் மாளிகைக்குள் நுழைந்தவுடன், அவனை வரவேற்காது விளையாட்டொன்று சூழ்ந்தகன்ற மந்தாகினி, தொலையாத நானெல்லாம் தொலைந்து தன்னைநாடி வந்த நாயகன் தானங்கு இல்லாத குறையை எவ்வாறு தாங்குகின்றான் என்பதைக் காண விழைந்தனளாய் மெல்லமெல்ல அந்தரங்க நெறிவழியாய் அடுத்த அறைக்கு வந்து அதனின்று இதற்கெய்தும் வாயிற்கிட்ட திரைச்சிலையூடு மறைந்திருந்தாள். அவளது கண்முன் நிகழ்ந்த காட்சி எண்ணரிய வியப்பும் துயரமும் அவள்பால் விளைத்ததெனப் புகலவும் வேண்டுமோ! தன்னைத்தான் கண்டு கொண்டாட இசைந்து வந்துளான் சித்ராங்கன் என்று எண்ணியே மோசம் போயின அவள் அழுத கண்ணீர் ஆறகத் தானுயிர்க்கும் பெருமூச்சே பிடித்துந்த மறைவிடம் துறந்தகன்று தன் பூசைசெய் மனையுள் புக்குத் தரையிற் சாய்ந்து மூர்ச்சையுற்றனள்.



மந்தாகினி மறைந்திருந்த அறையிலேயே மற்றொரு திரையின்கண் ஒளிந்திருந்தாள் அவளது நட்புடைய தோழிகயற்கண்ணியும். பிரிந்தவர்கூடும்பெருவிழவினைக் கண்டு உவகையுற வந்தவள், காந்தியின் அழகிற்கும், சித்ராங்கனின் மொழியிற்கும், மந்தாகினியின் பழியிற்கும், இன்னவர் வகுத்த கூத்திற்குமே கரியாயினள். ஆயவள், சொந்தமன மந்தாகினியைத் தொடர்ந்து சென்று அவளுற்ற மூர்ச்சனை தெளிவதற் காவன செய்யலுற்றாள். மந்தாகினி கண் விழிக்கத் தன் தோழியின் மார்புமீது சாய்ந்திருப்பது கண்டு மேன்மேலழுவாளாக அவளைத் தேற்றுதல் கயற்கண்ணிக்கு அரியதாயிற்று. அழுவாள். தரைநோக்கித் தாழ்வாள். தோழியின் தோள்மீது தன்கரங்களை யூன்றிச் சோர்வாள். உயிரனைய பாங்கியின் கழுத்தினை யொருகரத்தால் மெல்லென அணைத்து மறுகை விரல்களால் அவள் கன்னமிரண்டையும் வருடிக், "கற்பிதமான இவ்வுலகே மாயையடீ, அம்மாயையின் புற்புதச் சாயையடி, கயற்கண்ணி, நம்மனோர் நொய்ய வாழ்க்கை" என விம்முவாள். "கண்ணே, நின்பொருட்டப் பெண்ணினிடம் கோமகன் நயந்து கூறியதைக் கேட்டிருந்தும் நீ இவ்வண்ணம் நோவதற்கு நிமித்தமில்லை," எனத் தன் தலைவியின் துயரை ஆற்றமுயன்றனள் கயற்கண்ணி.

"மதனனேவிகிதனுக அமுதமே கொண்டெழுதிய அந்நிருபத்தைத் தூது விட்டவன்பால், அன்பும் ஆர்வமுமல்லாது இரக்கமேயோ யான் எற்றுவப்பேன், பேதாய்" என மந்தாகினி புலம்பினள்.

"பெற்றதே பாக்கியமென் றமர்வதல்லாது யாது நாம் செய்யவல்லோம். பெருந்தகை இறைவி நீ இனி வருந்தல்."

"வருந்தல் வருந்தல்" எனத் தோழி தேற்றத் தேற்ற விம்மலும் அழுகையும் மந்தாகினிக்கு அதிகமாயிற்றேயன்றிக் குறைந்தபாடில்லை. முகமும் கண்ணும் வீங்கியவள் உருவமே மாறிப்போயிற்று. கருந்தனம் பெற்றிழந்த வறியோனென அருந்துயர் உழன்று நின்றாள்.

T. N. சேஷாசலம்.

# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

[546-ம் பக்கத் தொடர்ச்சி.]

### கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை.

ஒத்த ஆண்டென்று மல்லவா அன்பாராய்ச்சி செய்வோர் அறுதியிட் டுள்ளார்கள். இறைவனுக்கு என்ன ஆண்டென்று கூறுவது. ஆண்டவனுக்கு எல்லா ஆண்டும் ஒரே யாண்டுதான். நீங்காத இளமை யுடையவ ராதலால் அவரது ஆண்டு என்றும் பதினாறே. கண்ணப்பருக்கும் பதினாறாண்டு கூறுபவராய்ச் சேக்கிழார் "எண்ணிரண்டாண்டின் செவ்வி எய்தினர்" எனப்பாடுவார். காதல் கனிந்துவரும் காலம் அஃதேயாகும். காதல் தலைகாட்டும்போதே கடவுளிடத்துப் பதிந்துவிடல் அருமையினும் அருமை.

முப்பதாம் ஆண்டளவில் மூன்றற் றொருபொருளை
தப்பாமே சாரானே யாமாகில்
கலையளவே யாகுமாம் தான்கற்ற கல்வி
முலையளவே யாகுமாம் மூப்பு

என்பதில் முதலடியைப் "பதினாறாம் ஆண்டளவில்" என மாற்றிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் உடல் முழுதும்முற்றி இன்பந் துய்ப்பதற்குத் தக்கதாகின்றது. ஐயுணர்வெய்தி மெய்யுணர்வெய்த முயலும் நாள் அந்நாளே. அதுவரையும் மாக்களாய்த் திரிந்தவர் மக்களாய் விளங்குவதும் அப்போதுதான்.

இப்பதினாறும் ஆண்டில் எங்ஙனம் நின்றார் திண்ணனார். "தானே அவனே தமியர் காண" என்ற இடத்தில் தமியர் என்பதற்குப் பலரும் பலவகையாகப் பொருள் கூறுவர்.

"அவளும் மகளில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி உலகிற்கு ஒருத்தியே யாயினாள்; இவனும் ஆடவரில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி உலகிற்கொருவனே யாயினான்." என்று பொருள் கூறுவதொன்று. இப்பொருள் "ஒத்த கிழவனும் ஒத்த கிழத்தியும் "என்பதை விரித்துரைப்பதாகும். இதனையே இது வரையும் கூறிவந்தோம். இனி நக்கீரர் இதற்குத்"தம் முணர்வினர் அல்லாதல்" என்றதோர் இனிய பொருள் கூறுவார்.

தன்னுணர் வல்லாதல் என்பதனைப்பற்றி முன்னரே விரித்துரைத்தோம். கண்ணப்பர் முன் இருந்தநிலை முற்றும் மாறி வேற்றுருவோடு நின்றமை அருமையினும் அருமை ஆதலின் அதனை இன்னும் சிறிது மேற்சென்று ஆராய்வோம்.

நிலைமாறுதல் என்றால் என்னை? மனமாறுதல்தான். அஃதாவது என்ன? நமது எண்ணங்களும்நினைவுகளுமே மனமாகும். அவை எவ்வாறு மாறுகின்றன? நமது எண்ணங்களும் நினைவுகளும் உயிருள்ள பொருள்கள்போலப் போயும் வந்தும் உலவுவன ஆதலால்தான் மாறுபாடு உண்டாவதற்கு இடமேற்படுகிறது. நமது எண்ணங்களும் நினைவுகளும் உயிருள்ள பொருள்கள்தான் என உருவகம் கூறலாம்.

ஆனால் புலிபோன்றும் சிறுத்தைபோன்றும் தனித்தனியே ஒன்றோடொன்று மாறுபட்டு வாழ்வனவல்ல. ஒன்றோடொன்று மனமொத்து நம் எண்ணங்களோ ஒன்றாகக் கலந்துகொண்டு மனைவியும் மக்களும் அக்கம் பக்கத்தாருமாய் இயைந்து வாழ்வனவாகும். குடும்பம் குடும்பமாகக் கூடிக் குலாவுவன என்னலாம். அவற்றில் ஏதேனும் ஒன்றைத் தொட்டாலும் அழைத்தாலும் அந்தக் குடும்பமுழுதும் வெளிப்பட்டுத் தோன்றும்; சிலசில போது அக்கம்பக்கத்துக் குடும்பங்களும் ஏதோ நலம் பொலத்திற்குப் போதல்போலக் கூடி, ஒன்றன்பின் ஒன்றாக ஒய்யாரமாக வருகின்றன. ஒரு குடும்பம் போக மற்றொரு குடும்பம் வருமானால் அதுவும் ஒரு மாறுதல் தானே.

ஒரு வழிப்போக்கன் தன்னூருக்குச் செல்கின்ற தெருவழியாக நடந்து போகிறான். ஓர் ஆலமரத்தின்

அடியிலே நடக்கும் படுகொலையைப் பார்த்துப் பதைபதைத்து ஒதுங்கிப் பதுங்கிக்கொண்டான். அவன் மனதில் அன்றுமுதல் அவ்வாலமரமும் அப்படுகொலையும் அவ்வூர்வழியும் ஒன்றோடொன்று கலந்து உறவுகொண்டாடத் தலைப்பட்டன. ஒன்றாகவே வாழ்ந்தன. பின்னர் ஏதேனுமோர் ஆலமரத்தைக் காணும்போதெல்லாம் படுகொலையின் எண்ணமும் அவ்வூரின் நினைவும் அவனுக்கு வருகின்றன. ஒரு சிறுவன் தன்னுடன் விளையாடும் மற்றொரு சிறுவன் வீட்டிற்குப் போனபோது அவ் வீட்டார்கள் சுவைமிகுந்த அப்பமொன்று தந்தார்கள். 'இது ஏது' என்றான் வந்த சிறுவன். இருந்த சிறுவன் "இன்று எனது தந்தையார் இறந்தநாள் கொண்டாட்டம். இறந்தநாள் கொண்டாட்டத்தின் போதெல்லாம் எனது தந்தையார் மிக விரும்பியுண்ட இவ்வப்பத்தைச் சுடுவது வழக்கம்" என்றான். இதைக்கேட்ட பையனது மனதிலே அப்பமும் அப்பாவின் இறந்தநாள் கொண்டாட்டமும் மணம் செய்துகொண்டு உறவாய் மருவின. பின்னர் ஒரு நல்லநாள் அன்று இந்தப்பையன் வீட்டில் அப்பம்சுட்டு அவன்கையில் கொடுத்ததும் அதை எடுத்து ஓடிப்போய்த் தன் தந்தையைப்பார்த்து "இன்று உமது இறந்தநாள் கொண்டாட்டம். இந்த அப்பம் சுட்டுக் கொடுத்தார்களே" என்று கேட்டானாம். மற்றொரு கதையும் இதனைவற்புறுத்தும். தென்னாலி இராமன் சுடச்சுடப் பாலைக் காய்ச்சிப் பூனை எதிரில் வைத்தான். பூனை ஆவலோடு ஓடோடியும் வந்து நாக்கை நீட்டிப் பரபரப்புடன் நக்கக் குடிக்கத் தொடங்கியது. சுறீல் என்று அண்டிக்கொள்ள அலறி அழுதது; நாக்கும் வெந்துபோயிற்று. அன்றுமுதல் ஆறின பாலையும் முகர்ந்து பார்ப்பதில்லை. கண்டதும் எடுக்கும் ஓட்டம். அதன் மனதில் பால் என்ற எண்ணமும் சூடு என்ற எண்ணமும் ஒன்றாய் இழைந்துபோய்விட்டன. இத்தகைய எண்ணத் தொடர்கள் ஒன்றல்ல, பல நம்மனதில் புகைவண்டித் தொடர்கள்போல எழுந்தோடுகின்றன. மணியடித்ததும் வண்டித் தொடர்களைப் புகைவண்டிகள் இழுத்தோடுவதுபோல நாம் ஏதாவது ஒன்றை நினைத்தால் அஃது தனக்குத் தொடர்ச்சியான எண்ணங்கள் முழுவதையும் இழுத்துக்கொண்டு ஓடுகின்றது.

ஒவ்வொரு எண்ணத்தொடரும் ஒவ்வொரு உலகம் ஆகும். பெரியோர்கள் பதினான்குலகம் என்பார்கள். ஆனால் நமது உள்ளத்திலோ பதினான்கல்ல பதினான்காயிரம் உலகம் உள்ளன. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு உலகில் வாழ்ந்து வருகிறோம். உண்ணும்போது வாழ்வது ஓர் உலகம்; உலவும்போது ஓர் உலகம்; எண்ணும்போது ஓர் உலகம்; எழுதும்போது ஓர் உலகம். நம்மவரில் ஒருவன் ஓர்வேலையில்போய் அமர்கின்றான். அங்கே மேனாட்டாரோடும் கூடிப் பழகுகின்றான். அவர்களது நடையுடைகள் அவனுக்குப் படிந்து விடுகின்றன. அவர்கள் மொழியே பேசுகின்றான். அவர்களில் ஒருவனாகவே தோன்றுகின்றான். தோல்தான் கோள் சொல்லுகின்றது. இவனே வீட்டிற்குத் திரும்புகின்றான். முன்னைய நிலைமை எங்கோ பறந்துபோய் விடுகின்றது. அந்நடையுடை எல்லாம் அடியோடும் மறைந்து விடுகின்றன. புத்தம்புதியவன் ஆகிறான். பிறருக்கு அடிமையாகிக் கைகட்டி வாய்பொத்தி நின்றவன் இப்பொழுது தன் வீட்டிற்கோர் அரசனாகி மனைவிமக்களை ஆள்கின்றான். அவன் இட்டதுதான் சட்டம். இவ்விடத்தில் எல்லோரும் இவனுடைய ஏவலாளரே. மொழியும் மாறுபடுகின்றது. குரலும் வேறுபடுகின்றது. கீழுலகிலிருந்து மேலுலகம் சென்றவனாகிறான். இவனே மற்றைய அக்கம்பக்கத்தாருடன் நடந்துகொள்ளும் வகையோ வேறாக இருக்கின்றது. முன்னைய அடக்கமும் பின்னைய முடுக்கும் இல்லை. அவர்களைத் தனக்கிணையாகக் கொண்டு, அதற்குத் தக்கவாறு பேசிப்போகிறான். இஃது நடுவுலகம். இன்னும் இவன் இவ்வாறே எண்ணிலா உலகங்களில் திரிந்து வாழ்கின்றான்.

ஒருபகல் பாதலத் தாடு வைகிடும்
ஒருபகல் மாதிரம் உலவிச் சேர்தரும்
ஒருபகல் விண்பதந் தோறும் உற்றிடும்
ஒருபகல் அயன்பதந் துன்னி மன்னுமே.

தண்ணறுந் துளவினன் தனது தொல்பதம்
நண்ணிடு மொருபகல் நாளும் இவ்வகை
எண்ணரும் உலகுதோ றேகி மாலையில்
துண்ணென மீள்வனாற் சூர பன்மனே.

என்று புகழப்பட்ட சூரனைப்போல நமது உள்ளமும் உலகங்களை யாண்டு ஓர் உலகினின்று வேறோர் உலகத்திற்குப் போயவண்ணமாகவே இருக்கின்றது. இஃது எல்லாருக்கும் என்றும் நடந்து கொண்டிருக்கிற மனமாறுதல்.

ஷைலாக் என்ற ஒரு பணப்பேயைப்பற்றி ஷேக்ஸ்பியர் மிக அழகாக எழுதியுள்ளார். ஈவிரக்கம் இல்லாத இவ்யூதன் தனது பகைவனான ஒரு கிறிஸ்தவனின் தசையில் ஒரு துலா வேண்டுமென்று மன்றாடிய வன்னெஞ்சன். அப்பேர்ப்பட்டவன் தனது மகள் ஜெஸிகாவின்மேல் உயிராக இருந்தான். அவளைப் பொறுத்த அளவில் பணமென்றும் பாராது கன்றினை ஈன்ற ஆவினைப் போல அன்பு பாராட்டியதை அழகுபட விரித்துரைப்பார் ஷேக்ஸ்பியர். அவனது வெளியுலகம் பணவுலகம், கொலை உலகம். அவனது உள் உலகம் மகளுலகம், அன்புலகம்.

வாஷிங்டன் என்பவர் அமெரிக்காவின் முதற்பெருந்தகை. அந்நாட்டிற்கு, தன்னரசுரிமை வாங்கித்தந்த அரும்பெரு மறவர் அவரே. அத்தகைய அஞ்சாநெஞ்சம் படைத்தவர் பூனையின்பேரைக் கேட்டாலும் நெஞ்சழிந்து அலறி நடுங்கி விழுந்தடித்துக்கொண் டோடுவார். சிறுபொழுதிலே நள்ளிரவில் பூனையொன்று இவர்மேலே திடீரெனத் தொப்பென்று விழுந்து சீறிக்கடித்து விட்டதோ என்னவோ; அன்றைய அச்சம் பசுமரத்தாணிபோல அவரது உள்ளத்தில் உறைந்து விட்டதுபோலும். அவ்வெண்ணம் அடியில் ஓர்மூலையில் அமிழ்ந்துகிடக்கும் பூனையென்ற பேர் கேட்டதும் மனக்கலக்கத்தால் மேலெழும்.

நக்கீரனார் கூறிய கண்ணப்பரது மனமாறுதலைப்பற்றி முன்னரே விரித்துரைத்தோம். உயிர்களை ஒன்றுவிடாமல் கொன்று குவிப்பதில் ஓர் இன்பம் கொண்ட இவ்வேடனே இறைவனெதிரே இளங்குழவிபோல இனிதே அடங்கி இன்ப அன்புருவாய் இருப்பான் என்கிறார் நக்கீரனார். முன்னே இருந்தது வேட்டை உலகம், பின்னே இருந்தது வழிபாட்டுலகம். இவ்விரண்டும் மாறிமாறி வந்துகொண் டிருந்தன.

இவையெல்லாம் சிறு மாறுபாடுகள். சேக்கிழாரோ முற்றுமாறிய நிலையைக் கூறுவார். வழிபாட்டுலகில் நுழைந்த கண்ணப்பர் பின்னொருகாலத்தும் வேடர் உலகத்தைக் கண்டவர் அல்லர். வேலைக்குச் செல்பவன் மேனாட்டாரோடு பழகுவதைக் கூறினோம். அவன் வேலையையே விட்டுவிடுவானானால் அந்தப் பழையவழக்கொழுக்கமெல்லாம் ஒழிந்து போகின்றன. அந்த அடிமை யுலகத்திற்கு மறுபடியும் அவன் திரும்புவதில்லை. புது மகனாகப் பிறக்கின்றான். இதுதான் முற்று மாறுதல் என்பதன் போலி எனலாம்.



இவ்வாறு முற்றுமாறுவது என்பதில், சிறிது சிறிதாக மாறி காலடைவில் முற்றுமாறி விடுவதும் உண்டு; திடீர் என முற்றுமாறி விடுவதும் உண்டு. இம்முற்று மாறுதலடைதல் எதனால் ஆகின்றது. நமது நினைவு என்பது ஓர் வெட்டவெளி. உலகிலுள்ள வெட்ட வெளியில் நின்று பார்ப்பவர்களுக்குச் சுற்று முற்றிலும் சிறிதளவுதான் நன்கு தெரிகின்றது. இடையிலே நின்றுபார்ப்பவர்களுக்குச் சிறிது தூரந்தான் பொருள்கள் நன்றாக விளங்குகின்றன. அவ்வாறு நன்றாகத் தெரிகின்றதொரு எல்லையைத் தாண்டினால் எல்லாம் மங்கலாய்ப் போய்விடுகின்றன. நிலமும் வானமும் முட்டிக்கொள்வன போலத் தோன்றுகின்றன. அஃதேபோல நமது உள்ளம் எனும் வெட்டவெளியிலும் நன்றாகத் தோன்றும் எண்ணங்கள் நடுவே இருக்கின்றன. அந்த எல்லையைத் தாண்டினால் அதற்கு அப்பால் உள்ளன எல்லாம் நினைவிற்கு நன்றாகவருவதில்லை. கனாக்கண்டாற்போல இருக்கின்றதென்கிறோம். கலங்கிமங்கலாக விளங்குகின்றன. கூர்ந்து எண்ணினால் சிற்சில நினைவிற்கு வருகின்றன. ஊன்றிப்பாராமற்போனால் அவை அங்கு இருப்பதாகவே நாம் எண்ணுவதில்லை. ஒருவன் விரைவாக எண்ணிய இடத்திற்குப் போய்ச்சேரவேண்டிப் பரபரப்போடும் எதிர்நோக்கிச் செல்கின்றான். அந்தப்புறமும் இந்தப்புறமும் திரும்பாதே போகின்றான். ஆனாலும், தெருவின் ஓரமாகத் தோப்புகளும் துறவுகளும் தொடர்ந்து வழி நெடுக இருப்பது அவனது மனதிலே அவனுக்குந் தெரியாமல் பதிகின்றது. பின்னே ஒருவர் அந்த வழியிலுள்ள தோப்பையும் துறவையும் பற்றிக் கேட்டபோது இவன் அவற்றை அழுந்திப்பார்த்தவன் அல்லனாதலினால், இவனது நினைவிற்கு வரவில்லை. ஆனால் கண்ணைமூடித் தான் போனவழியை நினைவிற்குக் கொண்டுவருகின்றான். தான் போனபாட்டையின் இருபுறத்திலும் தோப்புந் துறவும் தொடர்ந்து குளுகுளு என்றிருப்பது மனக்கண்ணாடியின் மற்றொரு ஓரத்தில் தோன்றுவது கண்டு தன் வாயைப் பிளக்கின்றான். மனமெனும் வெட்டவெளியில் நினைவிற்கு வரக்கூடிய எண்ணங்கள் உள்ள எல்லைக்கு அப்புறத்தில் அலைந்தவை பின்னர் ஊன்றிப்பார்க்கவே தோன்றலாயின. இவ்வெல்லைப்புற நினைவு சிலருக்கு மற்றையோரைவிட மிகுதியும் உண்டு; சிலருக்கோ சிறிதளவே உண்டு.

நினைவாகிய வெட்டவெளியில் எண்ணங்கள் இருக்கின்றன. சில உயிர் நிலையாகிய நடுவில் நிற்கின்றன. சில எல்லைப் புறத்தே அல்லாடுகின்றன. மற்றும்சில அங்கும் இங்கும் உலவுகின்றன. நடுவே இருப்பவை காலம் செல்லச் செல்லப் பழக்க வழக்கத்தால் வெளிப் புறத்திற்குப் போவதும் உண்டு; எல்லைப்புறத்தி லிருப்பன நடுவில் வந்து உயிர்நிலையாகி அவன் வாழ்க்கையை முற்றும் மாற்றி யமைப்பதும் உண்டு. இவ்வாறு நமது மனநிலை பச்சோந்திபோல வேளைக்கொரு நிறமாக மாறிமாறி விளங்குகின்றது. கடலில் மிதக்கும் பனிக்கற்பாறை போன்றது நமது உள்ளம் என முன்னே கூறினோம். நமக்கு அப்போதைக் கப்போது தோன்றும் எண்ணத் தொடர்களானவை, அந்தக் கடலின் தண்ணீர் மட்டத்திற்கு மேலே மிதக்கும் பகுதி என்றும் சொன்னோம். அப்பனிக் கற்பாறை உலகப் பொருள்களால் தாக்குண்டு இப்படியும் அப்படியும் புரள்கின்றது. அதனால் வெவ்வேறு பகுதிகள் மேல்வந்து தோன்றுகின்றன; வெவ்வேறு எண்ணத் தொடர்கள் அவ்வப்போது வெளிப்பட்டு விளங்குகின்றன. சிறுகச் சிறுக உருண்டு மேல் கீழாய் முடிவில் புரண்டு விடுகின்றது அம்மனப் பாறை. மனத்திற்கு முதல்வனும் முற்று மாறி விடுகின்றான்.

ஆன்றோர் ஒழுக்கத்தைப் பின்பற்றி ஒருவன் நடந்து வருகிறான். பிறப் பொழுக்கம் (சாதிதர்மம்) நிலை ஒழுக்கம் (ஆச்ரம தர்மம்) முதலியவற்றைப் பின்பற்றி வருகிறான். தீண்டாதார் எனும் கீழானோரைக் கண்ணாலும் பார்க்கமாட்டான். பழைய வழக்கஒழுக்கங்கள் இவனது உயிர் நிலையாய் நடுவிடமாகின்றன. பெரியோர்களைப் போற்றுவதும் அவ்வழக்க ஒழுக்கங்களில் ஒன்றுதானே. ஆகவே பல பெரியோர்களின் எண்ணம் அவனது நினைவின் எல்லைப்புறத்தில் இருக்கின்றது. காந்தியடிகளின் எண்ணமும் அங்கே ஒரு மூலையில் ஒளிந்திருக்கின்றது. பின்னர் அடிகளது பெருமைகளையும் அவரது அருமையான அன்பினையும் கேள்விப்படுகின்றான். அவரது அமைதி நிரம்பிய திருமுகத்தினையும், அருளொழுகி மலர்ந்த திருக்கண்களையும், பிற உயிர்களுக்கு இரங்கும் பெருநிலைமையும் நேரிற் பார்க்கின்றான். அவரது திருமறைப் பெருமொழிகளைத் தேனென உண்டு தேக்குகின்றான். அடிகளைப்பற்றிய எண்ணம் அவனது உண்மையாகிய வெட்டவெளியில் எல்லைப்புறத்திலிருந்து சிறிதுசிறிதாக நகர்ந்து நடுவிடந்தேடி வருகிறது. பழைய வழக்க ஒழுக்கங்கள் சிறிது ஒதுங்கிப் போதலும், காந்தியடிகளே அவனது உள்ளத்தின் உயிர் நிலையைக் கைக்கொள்கின்றார். அவரது ஒழுக்கத்தின் உயர்வை ஓதியும் கேட்டும் உணர்கின்றான். தீண்டாமை என்பதெல்லாம் தொலைதூரம் ஓடிப் போகின்றது. கீழ்மக்களைக் காணவும் அஞ்சியவன் கட்டித் தழுவிக் கரைந்து உருகுகிறான். முன்னே சிறந்த ஒழுக்கங்கள் என்று தான் தலைமேற் கொண்டொழுகியவற்றைப் போலிஒழுக்கங்கள் எனப் புறக்கணிக்கின்றான். முன்னிருந்த நிலைக்கு முற்றும் மாறாகி நடக்கத் தலைப்படுகிறான். இவ்வாறுகாலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு மாறிமாறி வாழ்ந்து வரும் உலக வாழ்க்கையிலே பழக்க வழக்கத்தினாலும் அறிவு வளர்ச்சியினாலும் நமதுமனநிலை மாறிக்கொண்டே வருகின்றது. முன்னர் வட்டமாக இருந்த மனம் பின்னர் முக்கோணமாகின்றது; அதுவே அறுகோணமாகலாம்; மறுபடியும் வட்டவடிவாகவும் ஆகிவிடலாம்.

மேற்கூறியவாறு சிறுகச்சிறுக மாறிக்கொண்டே வாராமல் திடீர் என எரிமலை பொங்கி வழிவதுபோல மனம் மாறுதல் அடையவும் அடையலாம். சின்னஞ் சிறுபோது தொடங்கி இளவரசராய்ச் செல்வத்தில் வாழ்ந்து, அழகிற் சிறந்த மனைவியை மணந்து, அறிவிற்பெரிய பிள்ளையைப்பெற்று ஒரு குறையுமில்லாமல் சிற்றின்பத்தில் ஆழ்ந்து கிடக்கின்றார் புத்தர் பெருமான், ஒருநாள் அழுகி உடல் குறைந்த ஆருநோயாளி ஒருவனையும் தள்ளாடித் தடியூன்றி நரையுந் திரையும் நடுக்கமும் ஒடுக்கமும் கொண்டு கூனி வளைந்து நடந்து செல்லும் குருட்டுச் செவிட்டுக்கிழவர் ஒருவரையும்; உயிர்போனதும் கட்டையாய்க் கிடத்தப்பட்டுக் கையுங்காலும் விறைத்துக் கொண்டு கிடக்கும் ஓர் பிணத்தையும் காண்கின்றார். துன்பமே இன்னதென்றறியாத அப்பெரியார் அதைக் கண்டதும் முகங்கோணி, உலகம் ஒக்காளம் என்று உணர்ந்து உலக இன்பத்தை உதைத்துத்தள்ளி மனைவியையும் மகனையும் அரசையும் விட்டு ஓட்டம்பிடித்துக் காட்டுக்குப்போய்க் கடுந்துறவு பூண்கிறார். நோயாய்க் கிழவனாய் நொந்துசாவதே வாழ்க்கையின் மறைபொருள் என எடுத்துரைக்கின்றார். இள அரசாய் இருந்தவர் இமைப்பொழுதில் இணையிலாத துறவி யாயினார். அருணகிரிநாதர் இளமையிலே சிற்றின்பத்துறையில் கண்மூடி அழுந்திக்கிடந்து விலைமாதர் வீடே மேலுலகம் என்று தம் கைப்பொருளை எல்லாம் அவர்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்துத் தொண்டு புரிந்துவந்தார். அவரது தமக்கையாரும் தனது செல்வத்

தம்பி யாதலினாலே அவர் கேட்டதை எல்லாம் இல்லை என்னாது கொடுத்துவந்தார். ஆனால் எறும்பூரக் கல்லும் தேயும். மலையத்தனை செல்வமும் விலைமாதர் எதிரில் கதிரவனெதிரே பனித்துளிபோலக் கரைந்து ஆவி யாய்ப் போய்விட்டது. அந்த அம்மையாரிடத்தே கட்டியிருந்த கந்தற்புடவையும் கசிந்துருகிக் கரையு மன மும் வாடி வதங்கி உலர்ந்த உடலுமேதவிர வேறொன்று மில்லை. அப்போதும் அருணகிரியாருக்கு விலைமாதர் வெறி தெளியவில்லை. இன்னும் ஏதாவதிருந்தால் கொடு எனத் தமக்கையை கேட்கவந்தார். கண்ணீரும் கம்பலையு மாய்க் கதறி அழுது "என்னருமைத் தம்பி, என்னடா செய்வேன். எல்லாம் பஞ்சாய்ப்பறந்து போயினவே. உன்னை மறைத்தொரு வஞ்சனையுண்டோ. இன்னும் பெண்ணின்பமே பேரின்பம் என்கிறாயே. என்னைத் தவிர இங்கொன்றுமில்லை. என்னைத்தான் விலைமாதாகக் கொள்ளவேண்டும்' என்று சொன்னவுடனே அவரது மனம் அப்பேச்சினாலே தாக்குண்டு மேலது கீழதாக மாறிவிடவே முற்றத்துறந்த முனிவராய் "சிவ" என்று கையாற் காதைப் பொத்திக்கொண்டு அம்மையார் காலில் விழுந்தெழுந்து எதிர் நின்று அருள்பெற்றாராம்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

# தமிழ்ப் பாடம் 29.

## நள வெண்பா

(548-வது பக்கத் தொடர்ச்சி)

### கலிதொடர் காண்டம்.

இனி நீர்விளையாட்டை வருணிக்கின்ற செய்யுள்கள் சில வருகின்றன.

கொங்கை முகத்தணையக் கூட்டிக் கொடுங்கையா
லங்கணைக்க வாய்நெகிழ்ந்த வாம்பற்பூக்—கொங்க
[விழ்தேன்
வார்க்கின்ற கூந்தன் முகத்தை மதியென்று
பார்க்கின்ற தென்னலாம் பார். 9.

பதப்பிரிவு:—கொங்கை முகத்து அணைய கூட்டி கொடும்கையால் அங்கு அணைக்க வாய் நெகிழ்ந்த ஆம்பல் பூ கொங்கு அவிழ் தேன் வார்க்கின்ற கூந்தல் முகத்தை மதி என்று பார்க்கின்றது என்னலாம் பார்.

அன்வயம்:—ஆம்பல்பூ......முகத்தை......பார்க்கின்றது, என்று சேர்த்துக்கொள்க.

பதவுரை.

கொங்கை - (ஒருத்தி) தன் முலையின்
முகத்து - நுனியில்
அணைய - நெருங்கி
கூட்டி - சேர்த்து
கொடும் கையால் - (தன்) உள்ளங்கையால்
அணைக்க - அணைப்பதால்
வாய் நெகிழ்ந்த - மலர்ந்த
ஆம்பல் பூ - ஆம்பல் மலரானது,
கொங்கு - வாசனை
அவிழ் - வீசுகின்ற
தேன் - தேன்
வார்க்கின்ற - ஒழுகுகின்ற
கூந்தல் - கூந்தலுடைய
முகத்தை - (அவளது) முகத்தை
மதி என்று - சந்திரனே வென்று
பார்க்கின்றது - பார்க்கின்றதைப்போல்
இருக்கிறது
என்னலாம் - என்று நாம் சொல்லலாம்,
பார் - (தமயந்தியே இக்காட்சியை நீ) பார்
(என்றான் நளன்)

விரிவுரை:—சந்திரனது வரவால் மலர்ந்து உவகையோடு இனிது நோக்கும் ஆம்பல் மலர், அப்போது பகலாயிருந்ததால் அதுகுவிந்திருக்கும். அதைப்பறித்து இவள் ஆசையோடு தன் மார்பில் அணைத்துக்கொண்டாள். கொள்ளவே இதழ் நெகிழ்ந்து அது மலர்வது இயற்கை. இதற்கு வேறு ஓர் காரணம் கூறுகின்றார் கவி. கூந்தல் குலவிய அவள் முகத்தைச் சந்திரன் என மதித்து ஆம்பல் அலர்ந்து விட்டது என்பர். ஆதலால் இது உளபுலவேது தற்குறிப்பேற்ற வணி ஆயிற்று. இன்னும் முகத்தை மதியென்று ஆம்பல் மயங்கியதால் இதனில் மயக்க அணியும் கலந்திருக்கின்றது. ஒன்றற்குள் ஒன்றாகப் பல அணிகள் பாட்டில் கலந்து வருகின்ற வழக்கமுண்டு. அது பாட்டினது அழகைப் பின்னுஞ் சிறக்கச் செய்யும்.

ஆம்பல் நீரில் விளையும் மலராதலால் மாதர் குளத்தில் இறங்கிச் செய்கின்ற செயலை இச்செய்யுள் குறித்தல் வேண்டும். ஆதலால் நீர் விளையாட்டைச் சேர்ந்ததென்று சொன்னோம். அடுத்த செய்யுளும் குவளையைக் கொண்டிருப்பதால் நீர் விளையாட்டே.

குறிப்பு:—இச்செய்யுள்களில் வருகின்ற அங்கு என்பது அசைச்சொல், பொருளில்லை.

கொய்த குவளை கிழித்துக் குறுநுதன்மே
லெய்தத் தனிவைத்த வேந்திழையாள்—வையத்தா
ருண்ணாக் கடுவிடத்தை யுண்ட வொருமூன்று
கண்ணனைப் போன்றனளே காண். 10.

பதவுரை.

கொய்த - பறித்த
குவளை - குவளை மலரினது இதழை
கிழித்து - கிழித்து (தன்)
குறு - சிறிய
நுதல்மேல் - நெற்றியின்மேல்
எய்த - பொருந்த
தனி - ஒன்றாக
வைத்த - ஒட்டிக்கொண்ட
ஏந்து - உயர்ந்த
இழையாள் - ஆபரணங்களை அணிந்த ஒருத்தி,
வையத்தார் - எவ்வுலகத்தி லிருப்பவரும்
உண்ணா - உண்ணமுடியாத
கடு - கொடிய
விடத்தை - விஷத்தை
உண்ட - உண்ட
ஒரு - ஒப்பற்ற
மூன்று கண்ணனை - மூன்று கண்களையுடைய
சிவபிரானை
போன்றனளே - போன்றிருக்கின்றாள்,
காண் - நீ பார்.

விரிவுரை:—குவளை மலர் கண்ணிற் குவமை. நெற்றியிலொன்று அதனை இவள் ஒட்டிக் கொண்டபோது மூன்று கண்கள் இருப்பவள்போல் தோன்றினாள். ஆதலால் இவளைச் சிவபிரான் என்று கூறலாம். (திருப்பால் கடல் கடைந்த காலத்து வந்த விஷத்தைப் பரமசிவன் அருந்தியதை யாவரும் அறிவர்)



குறிப்பு:—(1) உண்ணாக் கடுவிடம், என்பதிலுள்ள உண்ணாஎன்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். உண்ணாத, என்றிருத்தல் வேண்டும். அதன் ஈறாகிய த கெட்டு விட்டது.

(2) ஒரு, என்னும் சொல் சில சமயங்கள் ஒன்று என்னும் எண்ணைக்குறிக்காது, ஒப்பற்ற (Unique) என்ற பொருளை உணர்த்திவரும். தனி என்ற சொல்லுக்கும் இந்தப் பொருள் உண்டு. தயாதனின் தனி மைந்தன், தயாதனின் ஒரு மைந்தன், எனவருவது இந்தப் பொருளில் அந்தச் சொற்கள் வருவதற்கு உதாரணம். இச்செய்யுளில்'ஒரு மூன்று கண்ணான்'என்ற இடத்தில் ஒரு என்பதற்கு ஒப்பற்ற - சிறந்த, என்று பொருள்.

(3) ஆபரணங்களை அணிந்தவள் என்று பெண்களைக் குறிப்பது செய்யுள்வழக்கம். இனி, இந்த இழை - ஆபரணம், அடைமொழிகள் பெற்று, ஆய் இழையாள் -தேர்ந்தெடுத்த ஆபரணங்களை யணிந்தவள், சேர் இழையாள் - சேரான ஆபரணங்களை யணிந்தவள், தெரி இழையாள்- தெரிந்தெடுத்த ஆபரணங்களை அணிந்தவள், ஒளி இழையாள் - பிரகாசம் பொருந்திய ஆபரணங்களை யணிந்தவள், எனவரும். இந்தச் செய்யுளில் ஏந்திழையாள் என்பதும் அப்படிப்பட்டதொன்று. ஏந்திய ஆபரணங்களை உடையவள் - தாங்கிய அல்லது உயர்ந்த ஆபரணங்களை அணிந்தவள் என்று பொருள் கொள்ளவேண்டும்.

கொழுநன் கொழுந்தாரை நீர்வீசக் கூசிச்
செழுமுகத்தைத் தாமரைக்கே சேர்த்தாள்—கெழு
[மியவக்
கோமகற்குத் தானினைந்த குற்றங்க ளத்தனையும்
பூமகட்குச் சொல்லுவாள் போல். 11.

பதப்பிரிவு:—கொழுநன் கொழும் தாரை நீர் வீச கூசி செழு முகத்தை தாமரைக்கே சேர்த்தாள் கெழுமிய அ கோ மகற்கு தான் நினைந்த குற்றங்கள் அத்தனையும் பூ மகட்கு சொல்லுவாள் போல்.

அன்வயம்:—கொழுநன் கொழுந்தாரை நீர் வீசக் கூசி, கெழுமிய அக்கோமகற்குத் தான்நினைந்த குற்றங்கள் அத்தனையும் பூமகளுக்குச் சொல்லுவாள்போல், செழுமுகத்தைத் தாமரைக்கே சேர்த்தாள்.

பதவுரை

கொழுநன் - (ஒருத்தியினுடைய) நாயகன்
கொழும் - மிகுதியான
தாரை - தாரையாக
நீர் - நீரை எடுத்து
வீச - (அவள் மீது) வீசுவதனால்
கூசி - (அவள்) கூச்சம் கொண்டு
கெழுமிய - (அன்பு) நிறைந்த
அ - அந்த
கோ - சிறந்த
மகற்கு - புருடனின்மீது
தான் - அவள்
நினைந்த - எண்ணியிருந்த
குற்றங்கள் - பிழைகள்
அத்தனையும் - அவ்வளவும்
பூ மகளுக்கு - இலக்குமியினடத்தில்
சொல்லுவாள்போல் - (இரகசியமாகச்) சொல்
பவளைப் போல் (தன்)
செழு - வளப்பம் வாய்ந்த
முகத்தை - முகத்தை
தாமரைக்கு - தாமரையினுள்
சேர்த்தாள் - சேர்த்து மறைத்துக் கொண்டாள்.

விரிவுரை:—பொழில் விளையாட்டை வருணித்த போது, முதலில் மாதர்கள் மாத்திரம் தனியாய்ப் பூப்பறிப்பதை வருணித்து (2, 3, 4, 5-வது செய்யுள்கள்) பிறகு நாயகனும் நாயகியும் சேர்ந்து (6-வது செய்யுள்) விளையாடியதைச் சொன்னது போலவே, நீர் விளையாட்டிலும், 9, 10 செய்யுள்களில் மாதர்களைத் தனியாகவும், 11.வது செய்யுளில் நாயகனோடு சேர்த்தும் கூறுகின்றார் கவி. 12-வது செய்யுள், மாதர் மாத்திரம் விளையாடுவது. 13-வது செய்யுளில் காதலர் இருவரும் வருகின்றனர். 14, 15, 16-வது செய்யுள்களில் மாதர் மாத்திரம்.

குளத்தில் ஒருவர்மேல் ஒருவர் நீரை எறிந்து விளையாடுவதைக் கூறுகின்றது இச்செய்யுள். நாயகன் மிகுந்த நீரை எடுத்தெடுத்து நாயகியின் முகத்தில் வீசவே அவள் தாங்கமாட்டாமல் ஒருதாமரைமலரிற்குள் தன்முகத்தை வைத்து மறைத்துக் கொள்கின்றாள். தாமரையில் இருக்கின்றாள் திருமகள். அத்திருமகளோடு இவள் தன் செய்தியைச் சொல்வதுபோன்று இருக்கின்றது. அவள் கூறிய செய்தி என்ன என்பதை இரண்டு விதமாகக் கொள்ளலாம். ஒன்று. "இவன் எனக்குச் செய்கின்ற குற்றம், இந்நீர் எறிவதுபோன்ற பல உள. அவைகளை எல்லாம் நான் நினைத்திருக்கின்றேனே யன்றி மறக்கவில்லை. இன்னும் இதுபோல் எத்தனை எத்தனையோ, சொல்கின்றேன் கேள்" என்று அவள் தன் அன்னையோடு சொல்வதுபோல் திருமகளிடத்தில் சொன்னாள். அல்லது, "இவ்வளவு அன்புவாய்ந்த இவனிடத்தே நான் பலதரம் ஊடல் கொண்டு அவனுக்கு இழைத்துள பிழை எத்தனையோ. ஊடலால் அவனை மனவருந்தும் படி நான் செய்த குற்றங்களைச் சொல்கின்றேன் கேள்" என்று கழிவிரக்கங்கொண்டு தன் தோழியோடு சொல்வதுபோல் திருமகளோடு சொன்னாள் என்பது மற்ற அர்த்தம். இவ்விரண்டு அர்த்தத்திற்கும் "கோமகற்குத் தான் நினைந்த குற்றங்கள் அத்தனையும்" என்னும் சொற்கள் இடம் கொடுக்கின்றன. முதலாவது பொருளில், 'குற்றம்' என்பது அவன் இவளுக்குச்செய்த குற்றம்; இரண்டாவது பொருளில் இவள் அவனுக்குச் செய்த குற்றம்.

பொய்தற் கமலத்தின் போதிரண்டைக் காதிரண்டிற்
பெய்து முகமூன்று பெற்றாள்போ—லெய்த
வருவாளைப் பாரென்றான் மாற்றாரை வென்று
செருவாளைப் பார்த்துவக்குஞ் சேய். 12.

கருத்து:—ஒருத்தி தன் ஒவ்வொரு காதிலும் ஒவ்வோர் தாமரைப் பூவைச் செருகிக்கொண்டு வர"மூன்று முகம் பெற்றவள் போன்ற இவளைப்பார்" என்று நளன் தமயந்திக்குக் காட்டினான்.

பொன்னுடைய வாசப் பொகுட்டு மலரலையத்
தன்னுடனே மூழ்கித் தனித்தெழுந்த–மின்னுடைய
பூணா டிருமுகத்தைப் புண்டரிக மென்றயிர்த்துக்
காணா தயர்வானைக் காண். 13.

பதப்பிரிவு:—பொன் உடைய வாசம் பொகுட்டு மலர் அலைய தன் உடனே மூழ்கி தனித்து எழுந்த மின் உடைய பூணாள் திருமுகத்தை புண்டரிகம் என்று அயிர்த்து காணாது அயர்வானை காண்.

பதவுரை.

பொன் உடைய - மகரந்தத்தினுடைய
வாசம் - வாசனையையுடைய
பொகுட்டு - நீர்க்குமிழியும்

189012

மலர் - மலர்களும்
அலைய - அசையும்படி
தன்னுடனே - நாயகனுடனே (சேர்ந்து)
மூழ்கி - நீரிற்குள் முழுகி
தனித்து - (நாயகனுக்குமுன்பு) தனியாக
எழுந்த - (நீரிற்குமேல்) நிமிர்ந்த
மின் உடைய - பிரகாசம் பொருந்திய
பூணுள் - ஆபரணங்களை அணிந்தவளது
திரு - அழகிய
முகத்தை - வதனத்தை
புண்டரிகம் - தாமரை
என்று - என்று
அயிர்த்து - அனுமானித்ததால்
காணுது - தன் நாயகியைக் காணுமல்
அயர்வானை - தளர்கின்றவனை
காண் - நீ பார்.

விளக்கம்:—காண் - பார். யாரைக் காண்? அயர்வானைக் காண் - தளர்கின்றவனைப்பார். எப்படி அயர்வானை? காணுது அயர்வானை - பார்க்காமல் தளர்பவனை. என்ன காரணத்தால் காணுது அயர்வானைக் காண்? அயிர்த்து - அநுமானித்ததால். என்னவென்று அயிர்த்து? புண்டரிகம் என்று அயிர்த்து - தாமரை என்று அநுமானித்து. எதைப் புண்டரீகம் என்று அயிர்த்து? முகத்தை. எப்படிப்பட்ட முகத்தை? திருமுகத்தை - அழகிய முகத்தை. யாருடையை முகத்தை? பூணுள் திருமுகத்தை-ஆபரணங்களை யணிந்த தன் நாயகியினுடைய அழகிய முகத்தை. எப்படிப்பட்ட பூணுள்? மின் உடைய பூணுள்-பிரகாசம் பொருந்திய ஆபரணங்களை யணிந்தவள். எந்த மின்னுடைய பூணுள் திருமுகத்தைப் புண்டரிகம் என்று அயிர்த்துக் காணுது அயர்வானைக் காண்? எழுந்த மின்னுடைய பூணுள் திருமுகத்தை - எழுந்தவளாகிய பிரகாசம் பொருந்திய ஆபரணங்களணிந்த வளுடைய அழகியமுகத்தை. எப்படி எழுந்த? தனித்து எழுந்த-முதலில் தனியாகஎழுந்த. என்னசெய்து தனித்தெழுந்தவள் அவள்? மூழ்கி. யாருடனேமூழ்கி? தன்னுடனே - (நாயகனுகிய) தன்னுடனே. எப்படி மூழ்கினர்? அலைய - அலையும்படி, எது அலைய? மலர் அலைய? இன்னும் எது அலைய? பொகுட்டு - சேற்றுக்குமிழி. மலரும் குமிழியும் எப்படிபட்டன? பொன்னும் வாசமும் உடையன - மகரந்தப் பொடியும் வாசனையும் உடையன.

விரிவுரை:—இதுநாயகனும் நாயகியமாகச் சேர்ந்து நீரிலே விளையாடுகின்ற விளையாட்டின் ஒரு காட்சியை வருணிப்பது. தாமரைக் குளமொன்றில் இருவரும் இறங்கினர். அப்பொழுது, "நாமிருவரும் ஒரே சமயத்தில் நீரிற்குள் முழுகி யாரே வெகுநேரம் மூச்சுப்பிடிக்கக் கூடும் என்று பார்ப்போம். முதலில் எழுந்தவர் தோற்றூர்" என்று நிபந்தனை செய்து கொண்டு 'ஒன்று இரண்டு மூன்று' சொல்லி முழுகினூர். இப்படிக் கதும் என முழுகுவதால் அக்குளத்தில் இருந்த மலர்களும் எழுந்த குமிழியும் அலைந்தன. இதையே கவி, "பொன்னுடைய வாசப் பொகுட்டுமலரலையத் தன்னுடனே மூழ்கி," என்றவரையிற் சொல்கின்றூர். ஆனுல் நாயகி ஒரு தந்திரம் செய்தாள். நீரிற்குள் இருவரும் முழுகியவுடன் இவள் மாத்திரம் நீருளே இருந்து அவத்தைப்படாமல்தலையைநிமிர்ந்து கழுத்தளவு குளத்துள் இருக்கநின்று விட்டாள். அவள் 'தனித்தெழுந்த' விதம் இது பந்தயம் வெல்லுதற்குப் பாடுபடும் நாயகன் தன்னுலியன்ற அளவு நீரிற்குள் தடுமாறிப் பின் பொறுக்க முடியாமல் எழுந்தான். முகத்தை வெளியே வைத்திருக்கின்றூளாயினும் அவன் மனைவியைக் காணவில்லை. ஏனெனில் அவள் முகமும் தாமரையோடு தாமரையாக் கலந்து போயிற்று. இவன் கண்ணில் அம்முகம் தென்பட்டபோதும் தாமரையென்றே அதனை மயங்கி, இன்னும் அவள் நீரினுள்ளேயே இருந்தனள் என எண்ணித் தானே தோற்று விட்டதாக முதலில் மதித்தான். சிறிது நேரமாயது. இத்தனை நேரம் யாவராலும் நீரிற்குள் மூச்சை அடக்கி இருக்க முடியாததலால் அவளுக்கு என்னநேர்ந்ததோ, எனக்கலக்கங்கொண்டு தளர்ந்து வருந்தினுன். இவ்வளவும் பார்த்துக் கொண்டே அவன் மனைவி தனக்குள் சிரித்திருப்பாள். இக்காட்சியை னென் தமயந்திக்குக் காட்டினுன்.

குறிப்பு:—முகத்தை முகமென்றறியாமல் தாமரையென்று மயங்கியதால் இது மயக்க வணி.

# கம்ப ராமாயணம்.

## பாலகாண்டம்

### 6 கையடைப் படலம்.

[550-ம் பக்கத் தொடர்ச்சி]

பொய்யுரை யெல்லாம் பொய்போ லும்மே.

கதை முறையில் தொடர்ந்துவரும் வரலாறு மக்களின் இயல்பு காத்துப் பொதுவகையில் நிகழ்வதுவே போதுமென முன்னிங்குப் புகன்று தந்தோம். இதுவன்றி நாடகத்தில் பாத்திரங்கள் குணச்சிறப்பும் இணங்க வைத்தல் விதியென்ற வேற்றுமையைக் காட்டியதும் வாசகர்கள் நினைவிற்கொள்வர். தயாதன்பால் எச்சிமித்தம் எதுதன்னைக் கேட்கின்றுன் என்பது தவிர அய்வொன்றும் நாடகத்தின் அமைப்பிற்குக் கூறவேண்டாத் தகுதி நோக்கிச் செயலிருக்கும் வேள்வியினை நிருதரக் காப்பதற்குக் கரிய செம்மல் ஐயனையே அளித்திடுதி என்றமட்டில் கோசிகன்தான் சாற்றினின்றுன். நாடகத்தின் வளர்ச்சிக்கு முனிவனிவன் நவின்றமொழி இதுவே போதும். மாநுடர்தம் தன்மைகாட்ட அவன்நயந்து வழங்கியவோர் உவமை போதும். நடரிய வகைதன்னில் மும்மலத்துள் மயக்கத்தை எளிதில் மறக்க நாடியதே அவன்குணத்தின் சிறப்பிற்கு நனி போதும் என்பார் கம்பர்.

இனி, வான்மீக முனிவரின் நூலின்கண் இவ்விடமாகக் கோசிகனும் தயாதனும் உரையாடும் நெடுஞ்சொற்களை உற்று ஆராயுங்காலையில், அவை உலகப் பொதுஇயல் வழுவாது அமைந்த அழகும், கதைக்குத் தகுதியாகின்ற பெருமையும் நன்கு புலப்படும்.

மனதின் இருப்புநிலையை முகம் காட்டும், அம்மனதில் நிகழ்கின்ற நினைவின் வாய்மையைச் சொல் காட்டும். மாநுட இயற்கையை நன்கறிந்தவர், எவனுலும் நினைப்பதொன்றுகச் சொல்வதுவேறு சாதிக்க இயலுமென்று ஒப்புக்கொள்ளார். மனதில் எண்ணுவதும் வாயில் பேசுவதும் சொல்லளவில் வேறுகத் தோன்றுங்காலை, அவ்விரண்டையுந் தொடர்புபடுத்தி உண்மைதான் இருக்குமாறு இதுவென்று நோன்கூறிக் காட்டிக்கொடுத்து விடும் குறிகள் சில இருக்கின்றன. எத்தகையவனும் தனக் கெதிர்கரி தானே யாகின்றுன்.

மனதிற்கும் வாய்க்கும் வேறுபாடு உண்டாகும்படி நிகழ்கின்ற சமயங்கள் இரண்டுள. ஒன்று, பொய்யென்று அறிந்ததை மெய்யென்று பிறர் கொள்ளும்படி பேசுதல். செய்யாததைச் செய்ததாகவும், செய்ததைச் செய்யாததாகவும்; இருப்பதை இல்லையென்றும், இல்லாததை இருப்பதென்றும், இவையன்ன பிறவும், உண்மை எதுவென்று மனம் நிச்சயமாக அறிந்திருந்தும் அதற்கு மாருகக் கூறுவது பொய்யின் இலக்கணம். இதைச் சுத்தப் பொய் என்று கூறலாம். மற்றது, உண்டோ இல்லையோ என்னும் சந்தேகம் உரைப்போன் உள்ளத்திருக்க, அவன் உண்டென்றே பிறர் நம்பவேண்டும் என்னும் கருத்தோடு பேசுதல். சொல்பவனே தான் சொல்வது என்ன வென்று தெளியாமலேனும் நம்பாமலேனும் குழம்பும் நிலையிலிருப்பதை மறைத்துத் தெளிந்தவன்போலும் நம்பினவன்போலும் பாவனைபுரிந்து மற்றவர்களைத் தெளிவிக்கவும் நம்புவிக்கவும் தலைப்படுவது இப்பின்னதின் இலக்கணம். இதனைச் சுத்தப் பொய்யினின்று வேறுபடுத்திக்காட்டச் சந்தேகப்பொய் என்றழைப்பது பொருந்தும். உள்ளம் அறிந்ததை அறிந்தபடி உரைத்தலே மெய்ம்மொழி என்று எடுத்துக் காட்டுவது மிகை.

மனிதர் பேசும் பேச்செல்லாம் இம்மூன்று வகைகளுள் அடங்கும். இவைகளுள் எவ்வகைத்து ஒருவன் உரை என்று கேட்பவனுணரப் பேசுவோன் குரலும் முகமும் பேருதவியாய் நிற்கத்தக்கன. அவையல்லாமல் வேறு சில அறிகுறிகளும் உள. "அப்பா குதிரிற்குள் இல்லை" என்றதுபோல் சத்தப்பொய் கேளாமுன்னரே பிறக்குந் தன்மைத்து. அதுவன்றிக் கேட்டபின் கூறினும், அது பொய்யாயின், கேட்டவரையில் பதிலென்ற அளவோடு அப்பொய்யன் உரை நிற்காது. சொன்ன பொய்க்குச் சாக்ஷியும் பிற ஆதாரங்களும் பெரும்பாலும் அவன் தானகவே உரைக்கப் புகுவான். வேலைக்கு நேரங்கழிந்து வந்தவொருவன், அவன் வந்த வண்டி வழியில் உடைந்தது உண்மையாயின், தன் எஜமானனிடத்தில், "வண்டியுடைந்ததால் நேரம் சிறிதாயிற்று" என்றமட்டில் கூறியகல்வது இயற்கை. அவ்வாறின்றிச் "சிவப்புக் குதிரை கட்டிய 'ஜட்காவில்' வந்தேன். அது கடைத் தெருவண்டை வரும்போது சக்கரத்தின் கட்டுத்தளர்ந்து விழுந்தது. நான் புண்படாமல் தப்பிய அதிசயத்தை என்னென்று சொல்வேன். வலக்கையைக் கீழே ஊன்றி வண்டிக்காரனையுந் தாண்டிக் குதித்துவிட்டேன். அவனுக்கு நல்ல அடி. என் பக்கத்துவீட்டு இராமசாமியும் பார்த்துக்கொண்டிருந்தான். இனி இந்த 'ஜட்கா'வில் ஏறுவதே இல்லை என்று தீர்மானித்துவிட்டேன். நடந்து வருவதற்குச் சமானம் இல்லை. பத்துநிமிடம் முன்னரே புறப்பட்டால் நேரங்கடவாமல் வேலைக்கு வரலாமென்ற நிச்சயமாவது இருக்கும்" என்று குதிரையின் நிறமும் குதித்த விதமும் இராமசாமி சாக்ஷியும், செய்த தீர்மானமும், சந்தர்ப்பத்திற் கேற்றபடி இவையனைய பிறவும் வருமாயின் பெரும்பான்மை அத்தனையும் பொய்யாயிருப்பதற்கு ஐயமில்லை. ஆதலின், கேளாமல் வருவதும், கேட்டபின் கேள்விக்கு விடையன்றிக் காரணம் சாக்ஷி முதலிய ஆதாரங்கள் தொடர்வதும் கொண்டு, உரைத்தது பொய்யென்று உணரலாம்.

உரைப்பவன் உரைப்பது பொய் யென்று கேட்பவன் உணர்தற்கு விதி அதுவாயின், சந்தேகப்பொய்யொன்றை மதித்தற்குரிய விதி ஒருவாறு வேறுபடும். ஒருசொல்லால் சொல்லி வைத்தற்கியன்ற ஒன்றைமீண்டும் மீண்டும் பல சொற்களால் பன்னுவனுயின் தானுரைப்பதைத் தானே தெளிந்து நம்பத் திண்டாடுகின்றுன் என்பது நிச்சயம். இவ்விருவிதிகளும் வெளிப்படையாய்ச் சிலசமயங்களிலும் நுட்பமாய்ச் சிலசமயங்களிலும் பொருந்தக்கூடியன. மாநுட இயற்கையை மதித்து ஆராயும் ஆராய்ச்சியில் அவை பெரும்பாலும் பொய்க்கா வென்றே கூறலாம்.

தயாதனது சொற்களை இவ்விதிகள் கொண்டு நிறுக்க நிறுக்க மாநுட இயற்கையின் அறிவு வான்மீகிமுனிவருக்கு இருந்த நுட்பத்தை மேன்மேலும் கண்டு வியக்கின்றவராவோம்.

விச்வாமித்திரன் வந்தவுடன் தயாதனுக்கு வாஸ்தவத்தில் எவ்விதச் சந்தோஷமும் உண்டாயிற்று என்று எண்ண இடமில்லை. இம்முனிவன் கோபம் பிரசித்தம். இவன் எதற்காக வந்தானே, யாது கேட்பானே என்னும் ஓர் பயமே தயாதனின் மனதில் தோன்றியது. இந்தப் பயத்திற்கு உருவம் இல்லை. எனினும் இன்னதென்று தெளியாதவோர் அச்சம் அவனுள்ளத்தைப் பற்றியது. ஆதலாற்றுன் அதை மறைக்க முயன்றவனுய் 'மிகுந்த சந்தோஷம்' அடைந்திருப்பதாகக் காட்டிக் கொள்ளத் தலைப்படுகின்றுன். இல்லாத சந்தோஷத்தை விரித்துத்தானுரைக்கவேண்டும், உவமை முதலிய உதவிகள் தேடுவதும் இயற்கையே. ஆனுல் நினைப்பதொன்று உரைப்பதொன்று ஆவதால் அவன் முயன்று முயன்று பன்னிய உவமைகள் அவ்வளவும் அவன் நிலைமைக்கு என்னளவேனும் பொருந்த மற்றனவாய் முடிந்தன. பிறந்தது பயமேயாகத் தான் உவகையடைந்ததாய்ப் பலபடச் சாற்றியபின் அடுத்துவருகின்ற வாக்கியம்,

> "உமக்கு எந்தக் காரியம் எந்த விதமாய் முடிய வேண்டுமோ, அந்தக்காரியத்தை அந்தவிதமாகவே நான் மகிழ்ச்சியோடு செய்து முடிக்கக் காத்திருக்கிறேன்."

என்பதாகும். மன்னன் மனதில் பயமே முந்தியது என்பதற்குப் பொருந்தாவுவமைச் சந்தோஷத்தைத் தொடர்ந்து, கேளாமுன் வாக்களிக்கின்ற இவ்விரைவே தக்க சான்று. இலனென்ற எவ்வம் முனிவன் இயம்பாமுன் ஈந்த வண்மை இது, எனப் புகழவேண்டா. இவ்வுரை மனதோடு நம்பிச்சொன்ன சொல்லாயின் இதற்குமுன் அந்தத் தப்பு உதாரணமும் வந்திருக்காது; இதன் பின்,

> "தானங்களைப் பெறுதற்கு உத்தம பாத்திரமானவர் நீர்தாம். எனது பாக்கிய விசேஷத்தாலேயே நீர் இங்கு வந்தீர். இப்பொழுது உமது வரவால் என் ஜன்மம் சபலமாயிற்று. என் பிழைப்பும் நற்பிழைப்பாயிற்று.........................."

என்று தான் கொடுக்கத்துணிந்ததற்குக் காரணம் முதலிய ஆதாரங்களும் தொடர்ந்து இரா. இம்மட்டோ; மிகைபடக் கூறிய திவ்வளவும் போதாவென்று உடனே மீண்டுமோர் முறை அடியைப்பிடித்துத் தொடங்கித் தான் கொடுக்கின்ற நிச்சயமும், அந்நிச்சயத்திற்குக் காரணமும்,

> "நீர் காரியம் எதையாவது உத்தேசித்து வந்திருந்தால் அதைச் சொல்லியருளவேண்டு மெனக் கேட்டுக் கொள்கின்றேன். எவ்விதமாயாவது நான் உமக்கு ஊழியஞ்செய்ய அதிக ஆசை உடையவனுயிருக்கின்றேன். நீர் சொன்ன காரியத்தை நான் செய்கிற விஷயத்தில் நீர் சிறிதும் சங்கிக்க வேண்டியதில்லை. நீரே எனக்குக் கடவுளாதலால் நீர்

சொல்லும் வேலை யெல்லாம் செய்யச் சித்தனாய்க்
காத்துக்கொண் டிருக்கிறேன்......."

என்று தயரதன் கூறியதுகூறப் புகுவானேன். மன்னன் மனத்துள்ளே குழம்புகின்றான். ஒன்றுங் கேட்கத்தான் வந்ததில்லை எனக் கோசிகன் கூறினாலாகாதா, என்ற ஆசை ஒருபக்கம். கேட்பினும் கொடுத்தற்கு இயன்ற வொன்றைக் கேட்கவேண்டுமே என்ற கவலை ஒரு பக்கம். அவ்வாறன்றித் தனதுயிரையோ அதற்கீடானவொன்றையோ கேட்டுவிட்டால் என்செய்வது எனும் நடுக்கம் நெஞ்சத்தைக் குலைக்கின்றது. "அப்படிக்கேட்டாலும் கொடுத்துத்தான் தீர வேண்டும்" என்று ஒரு போது துணிகின்றான். ஆனால் அத்துணிவில் அவனுக்கே நம்பிக்கையில்லை. சங்கை யேற்படுகின்றது. ஆகையாற்றான் "நீர் சிறிதும் சங்கிக்க வேண்டியதில்லை" என்று அவன் அவ்வளவு அழுத்தி வற்புறுத்த நேர்கின்றது.

தயரதன் இவ்வளவெல்லாம் சொல்லிச் 'சங்கிக்க வேண்டியதில்லை' என்று கூறியிரானாயின் ஒருவேளை விச்வாமித்திரர் சங்கை கொண்டிருக்கமாட்டார். வாய்வருமொழியின் உண்மைத்தன்மை உணர்தற்கு இங்கு வகுத்த விதிகளை அநுசரித்துக் கோசிகன் தயரதனின் வாக்குறுதியில் நிச்சயங் கொண்டிலன் என்றே எண்ணிற் பிழையில்லை. அல்லாக்கால்,

"நான் எதை உத்தேசித்து இங்கு வந்தேனோ
அதை இப்பொழுதே தெரிவிக்கின்றேன் அதைச்
சந்திய சந்தரான நீர் நிறைவேற்றி வைக்கவேண்
டும்"

என்று அச்சுறுத்தும் பாயிரத்தோடு தன்மொழி தொடங்கியதும், பின்

"குழந்தையாயிற்றே என்று நீர் மனம் கலங்க
வேண்டாம்..............உடனே இராமனை நீர்
என்னுடன் அனுப்பவேண்டும்............இல்லை
யென்று சொல்லாமல் இராமனை உடனே என்னு
டன் அனுப்பவேண்டும்......சிறிய குழந்தையைப்
பெரிய காரியத்தில் அனுப்புகின்றோமே என்று
உமது மனதில் கொஞ்சமேனும் வருத்தப்பட
வேண்டாம்"

என்றென்று நான்குவாக்கியத்திற் கொருதாம் இடையிற் புகுத்துவதும் வேறெக் காரணம்பற்றி நேர்ந்திருத்தல் கூடும்? விச்வாமித்திரன் இராமனுடைய பராக்கிரமத்தைப்பற்றிக் கழறுகின்றனவும், அவனுக்கிவன் அஸ்திர சஸ்திரங்களை அளிக்கப் போவதாகச் செப்புகின்றனவும்; வசிட்டனைக் கேட்டு அவனது பெருமையைத் தெரிந்து கொள்ளும்படி கூறியனவும் எல்லாம், தயரதன் கொடுக்கப் பின்னிடுவான் என்ற நினைவினால் அவனைத் தேற்றுவிக்க வந்தனவே என்றுணர்தல் அருமையன்று.

கேட்டது எதுவானாலும் மறுப்பேனெனும் சங்கை வேண்டா என்று அத்துணை அழுத்தமாய் வாக்களித்த கோசலவேந்தன், இத்தனையளவு விச்வாமித்திரன் தேற்றியுந் தேறானாகி, எத்துணை நிச்சயமாய் "நான் ஒரு பொழுதும் என்னுடைய பிள்ளையை அனுப்பேன்" என்று மறுத்துவிடுவது தெரிந்தபின், அவன் முதல் மொழியின் தன்மையை நாம் தேர்ந்தவிதம் தவறில்லை. மாநுட மனதின் இயற்கையும் செயலும் முற்றிலுமுணர்ந்த முனிவர் வான்மீகராதலால் தயரதன் தரமாட்டேன் என்று அடியோடு மறுக்கப் போவதற்கு முன்னாலேயே அவன் 'தருவேன்' என்று சொன்ன சொற்களிலேயே ஆதாரம் அமைத்து வைக்கின்றார்.

கம்ப தயரதன் "எது கேட்டாலுந் தருகின்றேன்" என்று வாக்களித்ததில்லை. வான்மீக தயரதனின் என்னளவும் புத்திர வாஞ்சையிற் குறைந்தவனுமல்லன். இராமனைக் கொடுக்கமாட்டேன் என்றும் பின் அவன் மறுக்கவில்லை. கோசிகன் கேட்டானாகில் அது எதுவானாலும் தான் தருவன் என்ற மனவுறுதி அவனுக்குண்டு. தன்னையே தான் முற்றிலும் நம்பினவன் அவன் ஆதலாற்றான், "இனிச் செய்வதருளுக" என்றதல்லால் பிறபேசினானல்லன். அவன் காப்பன் என்னும் சங்கை சிறிதேனும் இல்லாக் கோசிகனும், "கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி" என்று கேட்பதே போதுமெனத் துணிந்திருந்தான்.

விச்வாமித்திரனுக்கு வாக்குறுதி அளித்த தெல்லாம் போக்கிலே போகவிட்டுத் தயரதன் தன்னுரை வழுவிய தாழ்மையே பூண்டு நின்றது வான்மீக முனிவர் அது சரித்த கதைமுறைப்படி முற்றிலும் கடிதற் கொத்ததன்று. அந்நிலையில் இருந்தவோர் அரசன் சொல்வதையும் செய்வதையும் இயற்கைக்கு இம்மியும் வழுவாது பொதுவாக இயம்பினரேயன்றித் தயரதனின் முன்பின் சரித்திரத்திற்கு இன்றியமையாதபடி அவன் செயலையும் சொல்லையும் வகுத்திலர். இன்னபடி வாயால் அளித்ததைக் கையால் மறுக்க வல்லவன் தயரதனாயின், பிறகு சீதையை மணம் புரிந்ததற்கப்பால் சுபம்கூறி முடிப்பது தவிர இராமகதை மேல் நிகழ்வதற்கு நியாயமில்லையே. விச்வாமித்திரனுக்கு இங்கு வாக்குக் கொடுத்திருந்தது போலவே தயரதன் அங்குக் கைகேசிக்கும் வாக்குக் கொடுத்திருந்தான். இன்றிருந்த புத்திரவாஞ்சை அன்றுமிருந்தது. ஆனால், முனிவனுக்கே சொன்னபின் தவறிய சொல்லைத் தயரதன் மனைவியின்பால் நிறைவேற்றிவைக்க நேர்வது இயற்கையுமன்று, நியதியுமன்று. விச்வாமித்திரனிடத்தே மொழியும் பிறழ்ந்து ஈகையும் தவிர்க்கக் கூடியவன், இராமனையே பிரிந்தேனும் தன்னுயிரையே துறந்தேனும் அவ்வாய்மையையும் வண்மையையும் பின்னொருநாள் காத்தனெனல் வைத்துக்கட்டிய கதையேயன்றிப் பாத்திரங்கள் தம் இயற்கையோடு உருவமோடு சரித்திரத்தோடு தொடர்ந்து நிகழ்த்திய நாடகமாகாது.

புத்திரவாஞ்சை மிருகத்திற்கும் மனிதருக்கும் பொதுவானவோர் இயற்கைத் தருமம். இதுவும் பொறையறிவு ஈகையாதி நற்குணங்களும் ஓர் உயர்நிலையளவு பெற்றுள மனிதன் விலங்கினத்திற் சிறந்த மேம்பாடுடைய தன்மையனேயன்றி அதனைக் கடந்து அப்பாலுள்ள நிரந்தர வாய்மையின் தெய்வீகத்தன்மை எய்தியவனாகான். வாய்மையும் மரபுங் காத்துத் தன்னுயிர் துறக்கும் வள்ளல் தூயவனாய்த் தயரதன் அமையவேண்டியதின் அவசியத்தை நோக்கி இவனைக் கம்பர் இராஜரிஷி தர்மமுடையனாகத் தந்நூலில் திரித்து அமைத்துக் கொண்டதை மீண்டுமிங்கோர் முறை நினைவிற் கொள்வது நலம்.

எனின், கம்பரின் கற்பனையாய தயரதன் அப்போதைக் கிப்போதே ஏற்றவாறு நடந்து கொள்கின்ற நயமும் பெருமையும் உணர்த லருமையன்று. அவன் வாக்களிப்பதும் பிறகு அதை மறுக்க வேண்டியதுமான வோர் நிலையே இக்களத்தில் கம்பர் விளைவிக்கவில்லை. ஆதலால் அவனது வாய்மை, பெரியதொரு முயற்சியின்றியே, தன்னைத்தான் காத்துக் கொண்டது. இனி, ஈயேன் என்ற இழிசொல்லும் அவன்வாய் வரவுமில்லை. மற்றென் செய்தான்?

தொடையூற்றுந் தேன்துளிக்கும் நறுந்தாரான்
ஒருவண்ணந் துயர நீங்கிப்
படையூற்ற மிலன்சிறிய னிவன்பெரியோய்
பணியிதுவேல் பனிநீர்க் கங்கை
புடையூற்றுஞ் சடையானு நான்முகனும்
புரந்தரனும் புகுந்து செய்யும்
இடையூற்றிற் கிடையூறா யான்காப்பன்
பெருவேள்விக் கெழுக வென்றான்.

வாய்மை வண்மை என்னும் இரண்டினின்றும் விலங்கியவோர் நாவின் செய்தி இவ்வுரையில் நிகழ்ந்திலது.

T. N. சேஷாசலம்.



# அகத்திய முனிவர்.

(556-வது பக்கத் தொடர்ச்சி)

இக்கதையையும் விஷ்ணுவைச் சிவலிங்கமாக்கிய வரலாற்றையும் ஊன்றிப்பார்த்தால் அகத்தியர் தென்திசைக்கு வந்த காலத்திற்குப் பிறகும் அங்குச் சைவமதப்பற்றுதல் குறைந்து வைணவ மதப்பிரசாரஞ் செழித்திருக்க வேண்டும். ஏனெனில், அரசனது கொள்கையிலேயே பெரும்பாலும் அந்நாட்டுக் குடிகள் செல்வார்கள். அக்காலத்தில் வைணவமே ஆதரிக்கப்பட்டு வந்திருக்க வேண்டும். அகத்தியமுனிவர் சைவப்பற்றுதலுடையவராதலால் அம்மதத்தைப் பிரசாரஞ்செய்து சைவசமயாசிரியருமாயினா ரென்க. இவர் சைவப்பற்றுதலுடையவரென்றதனால் வைணவ வெறுப்புடையவரெனல் தகாது. அதிலும் வெறுப்பிலா நடுநிலைமை யுள்ளவராவர். தவிர இவர் வெளிநாடுகளுக்குச் சென்று ஆங்காங்குச் சிவாலயங்கள் கட்டிச் சைவமதத்தை நிலைநாட்டிச் சீர்திருத்தமுஞ் செய்திருக்கின்றா ரென்பது பிறகறியலாகும்.

அகத்திய முனிவர் இக்காலத்து முனிவர்களைப்போல ஸ்வயம் பிரயோசனியா யிருக்கவில்லை. தாம் புகுந்த நாட்டார்களையும் தம்மைப்போ லாக்கவேண்டுமென்றெண்ணினர். நாட்டார் முன்னேற்றமடையக் கூட்டமே பிரதானமாகும். நாட்டா ரனைவரும் ஒன்றுகூடித் தமக்கு வேண்டியவைகளைக் குறித்து ஆழ்ந்து யோசித்து, துணிந்தபொருளை ஒருவர்க்கொருவர் தருக்கித்துத் தேர்ந்த முடிவிலே ஒழுகுவார்களாயின் நன்மை பெறுவதுமன்றி நாகரிகம் பெற்று முன்னேற்றமு முறுவார்கள். தவிர ஓர் நாட்டில் ஓர் புதிய பழக்க மேற்படுத்த வேண்டுமானாலும் அவர்களை ஒன்றுகூட்டித்தா னாக வேண்டும். இவைபோன்ற அரியசெய்கைகளை முக்காலமு முணர்ந்த முனிவர் எண்ணிச் சங்கங் கூட்ட முயன்றார்.

இவர் சங்கங்கூட்ட எண்ணின காலத்தில் பாண்டிய நாட்டில் காய்சினவழுதி அரசாண்டுவந்தான். ஆனால் அந்நாடு இப்பொழுது வழங்கப்பட்டு வருகிற பாண்டிய நாடன்று. பூமியும் இப்பொழுதிருக்கிற பரப்பைவிட அதிக விஸ்தீர்ணமா யிருந்தது. வான்மீக முனிவர் விந்தியமலைக்குத் தெற்கே ஆயிரம் யோசனை தூரமிருந்ததாகவும், பல கொடிய அரக்கர்க ளிருந்ததாகவுங் கூறுகின்றனர். அகத்திய முனிவர் அவர்களைவென்று தமிழ்நாட்டிற்கு வரும்போது மிக விரிவான தமிழ்நாட்டில்

பாணன் பறையன் துடியன் கடம்பனென்று
இந்நான் கல்லது குடியு மில்லை.

என்றபடி இந்நான்கு குடிகளைத் தழுவிய மனிதர்களும் இவர்களை யுட்படுத்திய பல குறுநில மன்னர்களும் இருந்தனரேயன்றி, வேறுவிதமாகத் தற்பொழுது ஏற்பட்டிருக்கிற பிரிவுகளில்லை யென்றே கருதலாம். வடநாட்டிலிருந்து அகத்திய முனிவருடன் வந்த அரசிளங்குமாரே பலவகையாலும் தென்னாட்டைத் திருத்தி விருத்தி செய்து சேர சோழ பாண்டி மண்டலங்களை யமைத்தன ரென்பது;

"சுராதி ராஜன் முதலாக வருசோழனு முனுட்
சோழமண்டல மமைத்த பிறகு"

என்ற தொடக்கத்துச் சான்றுகளை வைத்துத் துணியலாகும். இப்பொழுதுள்ள குமரிமுனைக்குத் தென்பக்கம் ஏழ் தெங்கு நாடு முதலிய பல நாடுகளும் குமரியாறு குமரிக்கோடு முதலியவைகளு மிருந்தன. அவைகளைப் பிறகு கடல்கொண்டுவிட்டது. இவ்விவரங்கள்

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

என்ற சிலப்பதிகாரத்தாலும், நக்கீரர் முதலிய உரையாசிரியர்கள் கூறுவதாலும் அறியக்கிடக்கின்றன. விரிக்கிற் பெருகுமாதலால் ஆண்டுக் கண்டறியத்தக்கன.

கடல்கொண்ட நாடுகளி லோடின குமரியாற்றின் கரையிலிருந்த தென்மதுரையில் காய்சினவழுதி யரசாண்டான். அகத்திய முனிவர் அவனிடஞ்சென்று உற்றதுரைத்து, ஆங்கு ஓர் சங்க மேற்படுத்தினர்; இச்சங்கத்தையே முதற் சங்கமென்றும் தலைச்சங்கமென்றும் சொல்லுவார்கள். இச்சங்கத்திற்கு அகத்திய முனிவர் செய்த அகத்தியமே இலக்கணமாயிருந்தது. அகத்திய முனிவருள்ளிட்டுப் பலர் குழுமி இதிலிருந்து தமிழாராய்ந்தனர். இச்சங்கத்தைப் பொறுப்பாக முதலில் நடத்தியவன் காய்சினவழுதியே யாவன். இவ்வகை யாற்றலுடையாரே இச்சங்கத்தி லிருத்தற் குரியாரென்றும், எவரேனும் புதிதாக எவ்வித நூல் செய்தாராயினும் அதை இச்சங்கத்திற்கொண்டு அரங்கேற்றினாலன்றித் தக்கதென ஒப்புக்கொள்ள மாட்டாதென்றும், ஒப்புக்கொள்ளப்பட்டால் தக்க மதிப்பும் பரிசும் கொடுக்கப்படுமென்றும் பறையறைவித்தனர். அவ்வாறே நடைபெற்றது. இச்சங்கம் 4440 வருடம் நடைபெற்றது. இவ்விவரங்களும் பிறவும் அடியில்வரும் பாவா லறியலாகும்.

"வேங்கடங் குமரி தீம்புனல் பௌவத்து
இந்நான்கு எல்லையின் இருந்தமிழ் பயின்ற
செந்நாப் புலவர் செய்தியீண் டுரைப்பின்
ஆடகக் குடுமி மாடக் கூடலின்
முன்னர்ச் சங்கக் கன்மாப் பலகையில்
திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள்
மன்றன் மாரத்தார்க் குன்றெறி யிளஞ்சேய்
திண்டிறல் புலமைக் குண்டிகைக் குறுமுனி
புவிபுகழ் மருதம் கவினிய முரஞ்சிப்
பதிமுடி நாகன் நிதியின் கிழவன்
இனையர் நானூற்று நாற்பத்தொன் பதின்மர்
அனையர் நாலொன் காயிர நூற்றொடு
நாற்பத்தொன் பதின்மர் பாக்கிற் செந்தமிழோர்
புரிந்தன செய்யுட் பெரும்பரி பாடலும்
முதுமை யடுத்த நாரையுங் குருகும்
கதியுறச் செய்த களரியா விரையும்
ஆங்கவ ரிருந்தது மத்தொகை யாகும்
ஈங்கிவர் தம்மை இரீஇய பாண்டியர்
காய்சின வழுதிமுதற் கடுங்கோ னீறு
எசிலா வகை எண்பத்தொன் பதின்மர்
கவியரங் கேறினு ரெழுவ ராகும்
மகத்துவ முடைய அகத்திய மிலக்கணம்"

இச்சங்கத்தையும் இதைச்சேர்ந்த நாடுகளையும் பிறவற்றையும் நாளடைவில் வந்த பிரளயத்தில் கடல்கொண்டுவிட்டது.

இந்தப் பிரளயம் வந்த காலத்தை யாராயுமிடத்து, துவாபர கலியுக சந்தியாக அது இருக்கவேண்டுமென்று கருதுகின்றனர். யுகசந்தியாவது யுக முடிவுக்குச் சுமார் ஐயாயிர மாறாயிரம் வருஷமுண்டெனு மளவிலுள்ள காலமாகும். ஒவ்வொரு யுகசந்தியிலும் பிரளய முண்டாகுமென்பது புராணக் கூற்றாகும். ஆகவே முதற்சங்கமிருந்த தென்மதுரை யழிந்தகாலம் இற்றைக்குச் சுமார் பன்னீராயிரம் வருஷங்களுக்கு முன்னாதல் வேண்டும். 'அத்திலாந்தி' சரித்திரமெழுதிய 'எலியட்' என்னும் பண்டிதர், இற்றைக்குச் சுமார் 11481 வருஷங்களுக்குமுன் ஓர் பிரளயம் வந்து போயதென்றும், அப்பிரளயத்தில் இப்பூமியில் சமுத்திர தீரத்திலுள்ள நாடுகளெல்லாம் பெரும்பாலும் சிதைந்தும் திரிந்தும் பூர்வ உருவம் பேதித்துத் தற்பொழுதுள்ள உருவம்பெற்றன வென்றும், போசிடோனிஸ் முதலிய தீவுகள் சமுத்திரவாய்ப்பட் டழிந்தன வென்றுங் கூறியிருக்கின்றனர். இஃதொருவாறு முதற்சங்கங் கடல் கொண்டகாலத்திற் கொத்திருக்கின்றது.

பிறகு அகத்தியமுனிவர் வேறொரு சங்கமேற்படுத்த எண்ணினர். கடல்கொண்ட தென்மதுரைக்கு வடபாலிருந்த கவாடபுரத்திற்கு வந்தனர். கவாடபுரத்தில் சங்கமேற்படுத்தும்போது வெண்டேர்ச் செழியன் ஆட்சிக்காலமாகும். அச்செழியனைக்கொண்டு ஆங்குச் சங்கம் நிறுவினர். இஃதே இரண்டாவது சங்கமெனவும் இடைச்சங்கமெனவும் பெயர்பெற்றது. இச்சங்கம் 3700

வருடமிருந்தது. இவ்விவரங்கள் அடியில் வரும் பாவா லறியலாகும்.

“வடுவறு காட்சி நடுவட் சங்கத்து
அகத்தியர் தொல்காப் பியத் தமிழ் முனிவர்
இருந்தை யூரிற் கருங்கோழி மோசியார்
என்னாப் புலமை வெள்ளூர்க் காப்பியன்
இறவா விசையிற் சிறுபாண் டரங்கன்
தேசிக மதுரையா சிரியன் மாறன்
தவரொப் பாய துவரைக் கோமான்
தேருங் கவிபுனை கீரந் தையரிவர்
ஒன்பதோ டடுத்தவைப் பதின்ம ராகும்
தவலருங் கேள்வித் தன்மைய ருள்ளிட்டு
அவர்மூ வாயிரத் தெழுநூற் றுவரோ
வையகம் பரவச் செய்த செய்யுளும்
இருங்கலி கடிந்த பெருங்கலித் தொகையோடு
குருகுவெண் டாளிதெருள் வியாழ மாலை
அந்நா ளிலக்கண மகத்திய மதனொடு
பின்னுட் செய்த பிறங்குதொல் காப்பியம்
மதிநலங் கவின்ற மாஅ புராணம்
புதுநலங் கனிந்த பூத புராணம்
வல்லிதி னுணர்ந்த நல்லிசை நுணுக்கமும்
தாவாக் காலந் தமிழ்பயின் றதுவும்
மூவா யிரத்தோ டெழுநூற் றியாண்டு
பரீஇய சங்கம் இரீஇய பாண்டியர்
வெண்டேர்ச் செழியன் முதலா விறல்கெழு
திண்டேர்க் கொற்ற முடத்திரு மாறன்
முரசுடைத் தானை மூவா வந்த
அரசுநிலை யிட்டோ ரைம்பத்தொன் பதின்மர்
இவ்வகை யரசரிற் கவியரங் கேறினோர்
ஐவகை யாச ராயிடைச் சங்கம்
விண்ணகம் பரவும் மேதகு கீர்த்திக்
கண்ணகன் பரப்பிற் கபாடபுர மென்ப ”

இச்சங்கத்தை வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திரு மாறனீருக ஐம்பத்தொன்பது பாண்டியர்கள் மூவாயிரத்தி எழுநூறு வருஷம் நடத்தி வந்தனர். பிறகு சானடைவில் இச்சங்கமிருந்த கபாட புரத்தையும் கடல் கொண்டது. இவ்விரண்டாவது சங்கமான இடைச் சங்கத்தில் அகத்திய முனிவரும் தொல்காப்பியனும் வீற்றிருந்தனர். அப்பொழுது அகத்தியத்திற்கு வழி நூலாகத் தொல்காப்பியரால் செய்யப்பட்ட தொல்காப்பியமும் இலக்கண நூலாக விருந்தது.

மறு முறையுங் கடல் கொண்ட கபாட புரத்திலேற் படுத்திய சங்கத்தைக் கூடலாகிய மதுரைமா நகரிலேற் படுத்தினர். இதே கடைச்சங்க மெனப்படும் இச்சங்கத்தில் அகத்தியமும் தொல்காப்பியமும் இலக்கண நூலாவிருந்தனவே யன்றி அகத்திய முனிவரும் தொல்காப்பியனும் வீற்றிருந்ததாகத் தெரியவில்லை. ஆயின் அகத்திய முனிவர் அங்கிருந்திருப்பாராயின் மூன்றாவது சங்கத்திலும் வீற்றிராமலிரார். மூன்றாவது சங்க மேற்படுத்தும்போது, அதாவது கபாடபுரத்தைக் கடல் கொண்ட காலத்தில், முனிவர் வேறெங்காவது சென்றிருக்க வேண்டும்.

இவர் கம்போடியா முதலிய தேசங்களுக்குச் சென்றிருக்கின்றாரென்பது அத்தேசத்துச் சிலாசாசனங்களாலும் பிறவாற்றாலும் தெளிவாகின்றது. அவ்விடங்களுக்கிவர் போயிருக்கும் பொழுதுதான் கூடன் மதுரையில் மூன்றாவதாகிய கடைச்சங்க மேற்படுத்தியிருக்க வேண்டும். இன்றேல் கடைச்சங்கத்திலும் ஏனைய சங்கங்களில் வீற்றிருந்து தமிழாராய்ந்து தலைமை பெற்றது போல முதன்மையாக வீற்றிருப்பரென்பதற் கையமில்லையெனக் கருதலாகும்.

கம்போடியா தேசத்தாரும் இவரைப் பிராமணரென்றேதான் கூறுகின்றனர். ஆங்குச்சென்று மஹீவித்த வம்சத்திலுள்ள யசோமதியென்னும் ராஜகன்னிகையை மணஞ்செய்து கொண்டனர். அவளுக்கு அகத்தியர் மூலம் ஓர் குழந்தை பிறந்தது. அக்குழந்தையே நரேந்திரவர்மனென்னும் அரசன் என்கின்றனர். லோபாமுத்திரையாரையுங் கூட அழைத்துச் சென்றிருப்பாராயின் மணஞ்செய்திருக்கமாட்டாரென்றெண்ணலாம். இவர் எக்காரணத்தால் யசோமதியை மணந்தனரென அறிய முடியவில்லையாயினும் தக்க காரணங்கொண்டுதான் மணஞ் செய்திருக்கவேண்டும். தொன்னூல்களிற் கண்ட சான்றுகளைத் தெரியும்போது முற்றத்துறந்த முனிவர்கள் ஏதேனும் தக்க காரணமின்றி மணஞ் செய்துகொள்ளவில்லை யென்று விளங்குகின்றது; ஆதலால் அகத்திய முனிவரும் அவ்வாறே செய்தனரென்க. இவைகளையெல்லாம் நோக்கும்போது அகத்திய முனிவர் அயல்நாடு சென்றபொழுது லோபாமுத்திரையார் விதர்ப்பதேசத்தி லிருந்திருக்க வேண்டும்.

இப்பொழுது கம்போடியா தேசத்தில் அநேக சிவாலயங்க ளிருக்கின்றன. அவைகளிற் பெரும்பாலன அகத்திய முனிவராற் கட்டப்பட்டனவென்று அவ்விடத்துச் சிலாசாசனங்களால் வெளியாகின்றது. அத்தேசத்தார் இவரைச் சிவகுருவென்று கூறியுள்ளார்—தவிர, இவர் போர்னியோ ஜாவா முதலிய தீவுகளுக்கும் சென்றிருந்ததாக வாயு புராணம் 48-வது அத்தியாயத்திலும் பிறவற்றிலுங் கூறப்பட்டுள்ளது. அதற்குதவியாக ஜாவாவில் அகத்திய முனிவர் சிவாலயங்கட்டி அதற்கு வத்ராலோகமென்று பெயர் வைத்தனரென்று கூறுகின்றனர். ஸாமித்திரா தீவில் மலையமென்னும் பெயருடைய பர்வதத்தில் அகத்தியமுனிவ ரிருந்தாரென்று கூறுகின்றனர். இப்பொழுது அம்மலைக்கு மலேயு வென்று பெயர். ஜாவாவிலும் இவருக்குச் சிவகுரு வென்றே பெயர். அந்நாட்டார் ஏதேனும் பிரதிக்ஞை செய்துகொள்ளும் போதெல்லாம் இவருடைய பெயரைச் சொல்லிக் கொள்கின்றனர். அவர்கள் அகத்திய முனிவர்கூடத் திரணபிந்து வென்பவரும் வந்ததாகக் கூறுகின்றனர். இத்திரணபிந்துவே திரணதூமாக்கினி யென்னும் தொல்காப்பியராவர். இக்காரணம்பற்றி இவரிருவரும் கடைச்சங்கத்திலிருக்கவில்லை யென்பதை யுறுதிப் படுத்தலாகும்.

(தொடரும்)

R. முத்தையர்.



## பால்.

மான்செஸ்டர் கார்டியன் என்னும் பத்திரிகையில் ஒரு வைத்தியர் எழுதுவது :—

பால் உணவுகளில் மிகச் சிறந்தது அதில் தேகவளர்ச்சிக்கு வேண்டிய வஸ்துக்களெல்லாம் இருக்கின்றன. தாய்ப்பாலில்லாத குழந்தைகளுக்குச் சுத்தமான பசும் பாலைவிட வேறு சிறந்த ஆகாரம் இல்லை. இதுமாத்திரமன்று. வளரும் பிள்ளைகள் பால் சாப்பிடுவதனால் அடையும் நன்மை மிக அதிகம் என்பதை டாக்டர் கோறிமான் என்பவர் செய்திருக்கின்ற சோதனை நன்றாய்த் தெரியப்படுத்துகிறது. அனேக வருஷகாலமாக இதற்காக ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூட மொன்றிலுள்ள பிள்ளைகளுக் கெல்லாம் ஒரேவகையான உணவு கொடுக்கப்பட்டது. சில பிள்ளைகளுக்கு மாத்திரம் ஒவ்வொரு நாளும் மற்றவர்களுக்குக் கொடுக்கும் உணவுக்கு மேலாக ஒரு பைண்ட் பால் கொடுக்கப்பட்டது மற்றப்பிள்ளைகளுடைய சராசரி வளர்ச்சி வருஷத்துக்கு 1·84 அங்குலமும் 3·85 இராத்தலுமாயிருக்கப் பால் கொடுக்கப்பட்ட பிள்ளைகள் வருஷத்துக்கு 2·63 அங்குல வளர்ச்சியும் 6·08 ராத்தல் நிறையும் காட்டினார்கள். இதுமாத்திரமன்று. அவர்களது சுகநிலையும் மற்றவர்களைப் பார்க்கிலும் சிறந்ததாயிருந்தது.

பால் குழந்தைகளுக்கு மாத்திர மல்லாமல் வளர்ந்தவர்களுக்கும் ஒரு சிறந்த உணவாயிருக்கிறது. ஒரு குவாட் (அதாவது இரண்டு பைண்ட் புட்டி) பால் ஒரு ராத்தல் இறைச்சிக்கும் அல்லது இரண்டு ராத்தல் மீனுக்கும் அல்லது ஒன்பது முட்டைக்கும் சரியாயிருக்கிறது. இதனால் பாலை ஒரு மலிவான உணவென்றும் சொல்லலாம். ஆகையால் பால் அதிகமாக உபயோகிப்பது செலவுக்கும் சுருக்கம்; தேகத்துக்கும் நல்லது.

ஆனால் பால் சுத்தமா யிருக்கவேண்டியது அத்தியாவசியம். பால் குடியாதிருப்பதனால் உண்டாகும் தேக அசௌக்கியம் அசுத்தமான பாலைக் குடிப்பதனால் உண்டாகும் தேகச் சுகக்கேட்டைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தபோதிலும் பெற்றோரும் வைத்தியர்களும் அசுத்தமான பாலைக் குடிப்பதனால் உண்டாகும் தீங்குகளைப் பற்றித் தெரிந்து அவற்றைத் தடுக்கவேண்டும்.

இங்கிலாந்தில் கணக்கிட்டபடி அத்தேசத்திலுள்ள பசுக்களில் மூன்றி லொருபாகம் க்ஷயரோகம் பிடித்தவைகளாயிருக்கின்றன. ஆனால் நோய்கொண்ட எல்லாப் பசுக்களின் பாலிலும் இந்த நோய் இறங்குவதில்லை. பல மாட்டுப் பால்களைப் பலதடவைகளில் சோதனை செய்ததில் நூற்றுக்கு ஐந்திலிருந்து பதினைந்து வீதம் வரையில் இந்த நோய் பாலில் காணப்படுகின்றது. பசுக்கள் மூலமாய் இந்த நோய் தொற்றி இறப்பவர் வருஷ வீதம் 3000-க்கும் 10000-க்கும் இடையில் இருக்கலாம். இதைத்தவிர இந்த நோய் மூலமாக உண்டாகும் அங்கக் குறைவு கட்டி முதலிய நோய் கொண்டிருப்பவர்கள் அனேகர்.

அழுக்கும் அனேகமாய்ப் பாலில் படிந்திருக்கிறது. இதன் காரணம் மடியில் சாணம் ஒட்டிக் கொண்டிருப்பதைக் கழுவாமல் பால் கறப்பது. தெருவில் திறந்த பாத்திரங்களில் பாலைக்கொண்டு வார்ப்பதும் தூசிமுதலியவைகள் படிதற்கு ஏதுவாகிறது. வீட்டிலும் திறந்த பாத்திரங்களில் பாலை வைப்பதனால் ஈ முதலியவைகள் மொய்த்து அதிலிருந்து, நோய்க்கிருமிகள் பாலில் தங்கி விடுகின்றன. பாலில் இவைகள் தங்கினால் உடனே அவைகள் வளர்ந்து பெருகி வெகுசீக்கிரத்தில் பாலைப் புளிக்கச் செய்கின்றன. அல்லது அதைக் குடிக்கும் குழந்தைகளுக்குச் சுகஈனத்தையும் பேதியையும் உண்டாக்குகின்றன. பால் வாங்குபவர்களுக்கும் விற்கிறவர்களுக்கும் இதனால் ஏற்படும் நஷ்டமும் அளவிறந்தது.

வாங்குபவர்கள் இவைகளைப்பற்றி மிகவும் கவலை ஈனமாயிருக்கிறார்கள். சுத்தமான பாலுக்கும் அசுத்தமான பாலுக்குமுள்ள வித்தியாசத்தைக் கவனிக்கிறதில்லை. சுத்தமாய்இருக்கும் பாலுக்குச் சொற்ப அதிகவிலை கொடுத்து வாங்குவதற்கும் தயாராயில்லை.

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM**

OF

**CEYLON CIVIL SERVICE**

WITH AN APPRECIATIVE

**FOREWORD**

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0. (V.P. Charges extra)**

*MANAGER:—*

***“KALANILAYAM”***

***11, VELLALA STREET.***

**Purasawalkam, MADRAS.**

## கம்பராமாயணம்
## பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A., B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெருது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்பிரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்ருர்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

## ஏமாங்கதத் இளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

# KAMBAN'S KOSALA
or
## A Poet's Plea for Culture
### by T. N. Seshachalam B.A., B.L., In English

**A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.**

## With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation,

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Rs. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.




# வர்த்தமானம்.

டிஸ்ரிக்ட் ஜட்ஜாக வேலை பார்த்து இளைப்பாறியிருந்த திவான் பகதூர் C. கிருஷ்ணசாமிராயர் சென்ற வியாழக்கிழமை மைலாப்பூரில் இறந்துவிட்டார்.

***

சர் ஜான் சைமன் திரும்பி இந்தியாவுக்கு வருவதற்குமுன் இங்கிலாந்தில் வெவ்வேறு இடங்களில் இந்தியாவைப் பற்றிப் பதினைந்து பிரசங்கங்கள் செய்வதாக ஒழுங்கு செய்திருக்கிறார்.

***

சென்னையில் மைலாப்பூரில் ஒரு சமையற்கார பிராமணன் தன் எசமானனின் வீட்டிலிருந்து ஒரு வைர நகையைத் திருடிக்கொண்டு சென்னையைவிட்டு வெளிக் கிளம்ப இருந்த சமயத்தில் போலீசாரால் பிடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டிருக்கிறான்.

***

பஞ்சாபில் ஹோஷயார்பூர் என்னும் இடத்தில் சமீபத்தில் சாண்ட்ஹேர்ஸ்ட் ராணுவக் கல்லூரியைச் சேர்வதற்காக இங்கிலாந்துக்குப் போகவிருந்த பிரிதம் சிங் என்பவர் குயினயின் மாத்திரை என்று எண்ணி நாய்க்காகச் செய்யப்பட்டிருந்த ஒரு மாத்திரையைச் சாப்பிட்டதனால் உயிர் துறந்தார்.

***

திரேந்திரநாத குப்தா என்னும் கல்கத்தா ஹைகோர்ட்டு அட்டர்னி ஒருவர் அவர் கட்சிக்காரர் ஒருவர் அவரிடம் அட்மினிஸ்டிரேடர் ஜெனரலிடம் ஒரு வழக்கின் தீர்ப்பின்படி கட்டுவதற்குக் கொடுத்த 75000 ரூபாயை மோசடி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு இப்போது ஹைகோர்ட்டில் விசாரணை நடக்கிறது.

***

எழும்பூர் ஸ்டேஷனில் வண்டித் தொடரை ஒன்றோடொன்றாய்க் கொழுவிக்கொண்டிருந்த ஒரு வேலையாள் ஒருவண்டி வந்து மற்றொரு வண்டியோடு அவன் இருந்த இடத்தில் மோத, அதில் கரியேற்றப்பட்டிருந்த ஒரு வண்டி சடுதியில் திறக்க உள்ளிருந்த கரி அவன்மேல் விழுந்து அவனை மூடிக்கொண்டது. கரிக்குவியலிலிருந்து அவனை வெளியே யெடுத்தபோது அவன் இறந்து விட்டான்.

***

உலகத்தில் யுத்த நிறுத்தம் செய்யவேண்டும் என்று ஐக்கிய நாட்டின் அரசாங்கத்தி லொருவரான கெல்லொக் என்பவர் சில வாரங்களுக்கு முன் உலகத்தில் பிரதமமான பதினைந்து அரசாங்கத்தாருக்கு அனுப்பியிருந்த உடன்படிக்கைக்கு முதல் முதலாக ஜர்மனியார் ஒத்துக்கொண் டிருக்கிறார்கள். இது விஷயத்தைப் பற்றி, ஆங்கிலேய பிரதிநிதியும் பிரான்சுப் பிரதிநிதியும் ஜர்மனியரோடு கலந்து பேசியதாகத் தெரிய வருகிறது.

***

பம்பாய் நெசவுச்சாலைகள் வேலையாட்களுக்குப் பண உதவிசெய்ய முடியாதென்று பம்பாய் முனிசிபாலிட்டியார் மறுத்து விட்டதின்மேல் சர் விக்டர் சசூன் என்பவர் பதினாயிரம் ரூபாயும், சர் வசல்பாய் கரிம்பாய் இப்ராஹிம் என்பவரும் ராசா பிரதாகிர்ஜி என்பவரும் ஆளுக்கு ஐயாயிரம் ரூபாயும், வேலையாட்களுடைய பிள்ளைகளுக்கு உதவிக்காகக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பணத்தையும் இதன் பொருட்டு இன்னும் சேரும் பணத்தையும் சரிவரச் செலவு செய்வதற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பம்பாய்க் கவர்னர் ஆயிரம் ரூபாய் இதற்குக் கொடுத்திருக்கிறார்.

***

சிறுவர்களுக்கேற்ற சிறந்த புஸ்தகம் ஒன்று எழுதினதற்காக D. G. முகர்ஜி என்பவருக்கு நியூபெரி மெடல் பரிசு அளிக்கப்பட்டது. இது ஐக்கிய நாட்டில் பிரெடிரிக் G. மெல்சர் என்னும் நியூயார்க் வாசி ஒருவர் ஜோன் நியூபெரி என்பவர் ஞாபகார்த்தமாய் ஸ்தாபித்த வெகுமதி. இது அமெரிக்கருக்கே அளிக்கப்படுவது. முகர்ச்சி என்பவர் கல்கத்தாவில் பிறந்த ஒரு பிராமணன். இவர் கல்கத்தா சர்வகலாசாலையில் பட்டம் பெற்றுப் பின் அமெரிக்காவுக்குச் சென்று அங்கேயே வாசம் செய்து வருகிறார். அவர் அனேக நூல்கள் எழுதியிருக்கிறார். இவருக்குமுன் இப்பரிசைப் பெற்றவர்கள் அமெரிக்கரே.

***

சில மாதங்களுக்குமுன் இந்தியாவுக்குச் சைமன் கமிஷனோடு வந்து திரும்பிய ஹாட்லி ஹோன் என்பவர் டாட்டா கம்பனியார் தங்கள் வேலையாட்களை மிகவும் சிறுமைப்படுத்துகிறார்கள் என்று இங்கிலாந்தில் அவர் செய்த பிரசங்கங்களில் அவதூறு கூறியதற்காக அவர்மேல் வியாச்சியம் தொடர விருக்கிற எண்ணத்தை டாட்டா கம்பனியார் அவருக்கு அறிவித்திருந்தார்கள். அவர் இப்போது தான் சொன்னதெல்லாம் பிழைஎன்றும் தான் அவ்விதம் சொன்னவற்றிற்கு ஒரு ஆதாரமும் இல்லை என்றும் ஆகையால் தான் சொன்ன வார்த்தைகளைத் தானே இப்போது மறுக்கிறதாகவும் பகிரங்கமாக அவர் முதலில் பிரசங்கம்செய்த மண்டபத்திலேயே தான்செய்த தப்பிதத்தை ஒப்புக்கொண்டார்.

***

அகில இந்திய வர்ணாசிரம தர்மசங்கத்தின் தலைவராகிய N. சீனிவாசாச்சாரியார் தஞ்சாவூர் ஜில்லாவில் பல இடங்களிலும் சென்று சைமன் கமிஷனோடு ஒத்துழைப்பது அவசியம் என்று பிராமணர்களைத் தூண்டிக் கொண்டிருக்கிறார். இதன் சார்பாக மாயவரத்தில் திவான்பகதூர் V.R. குப்புசாமி அய்யர் தலைமையின்கீழ் ஒரு கூட்டம் கூடி வர்ணாசிரம தர்ம சங்கத்தலைவர் சைமன் கமிஷனுக்குக்கொடுத்த விருப்பத்தை ஒட்டிப் பிராமணர்வாக்கு மூலம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். சபைத் தலைவர் பிரித்தானிய இராசாங்கத்தாருடைய தயையைப் பிராமணர்கள் இப்போது இழந்து விடுவது சரியல்லவென்றும் இப்போதிருக்கிற தேசத்தின்நிலையில் சுயராஜ்யம் கொடுப்பது பெரிய தீங்காய்முடியும் என்றும் சொன்னார்.

***

பர்தோலி வரிகொடா இயக்கம் சீக்கிரம் முடிவுக்கு வரும் என்று பம்பாய் கிரானிகிள் பத்திரிகை கூறுகின்றது. பம்பாய் கவர்னர் இப்பொழுது இது விஷயமாய்ச் சிம்லாவுக்குப் போயிருக்கிறார். போவதற்கு முன்னேயே பர்தோலி சத்தியாக்கிரகிகளுடன் செய்து கொள்ளத் தயாராயிருக்கும் ஓர் சமாதான உடன்படிக்கையையும் தயார் செய்திருக்கிறதாகத் தெரிகின்றது. அவ் வுடன்படிக்கையின் பிரிவுகள் இன்னவென்பது நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. என்றாலும், அவைகளின் தாத்பரியம் என்னவென்பதைக் கிரானிக்கிள்பின் வருமாறு கூறுகிறது:—

1. பர்தோலி குடியானவர்கள் பழைய கிஸ்தியை உடனே செலுத்திவிட வேண்டியது. 2. புதிய கிஸ்திக்கும் பழைய கிஸ்திக்குமுள்ள வித்தியாசத்தைச் சத்தியாக்கிரகிக ளல்லாத வேறு இரண்டொருவர் கவர்ன்மெண்டாரிடத்தில் கொடுத்துவைக்க வேண்டும். 3. கவர்ன்மெண்டார் சத்தியாக்கிரகிகளுக்கு நம்பிக்கையுள்ள நியாயாதிபதி ஒருவரை நியமித்து அவரைப் புதிய கிஸ்தி விதித்தது சரியா அல்லவா வென்பதைப்பற்றி விசாரணைசெய்யச் செய்வது. 4. இவ்விசாரணையின் முடிவு கவர்ன்மெண்டு பக்கமாயிருந்தால் குடிகள் உடனே வித்தியாசமாயிருந்த தொகையைச் செலுத்த வேண்டியது. குடிகள் பக்கமாய்த் தீர்ப்பு இருந்தால் முதல் கவர்ன்மெண்டில் கட்டிய தொகையை கட்டினவர்கள் எடுத்துக்கொள்வது. 5. இந்த இயக்கத்தில் கைதிகளானவர்கள் எல்லாரையும் உடனே விடுதலை செய்யவேண்டியது. 6. மேற்சொன்ன தீர்ப்பை இரு பக்கத்தாரும் மறுக்காமல் ஒத்துக்கொள்ள வேண்டியது.

# THOUGHTS FOR STATESMEN

from

## MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

## T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

## Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

**11, Vellala Street, Purasawalkum, Madras.**



# Dr. Orison Swett Marden's World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

**To discover what career you are best fitted for; To succeed in your chosen calling; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.**

### GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers—Diverted by salary—Mere money-making is not success.

### RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

### SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

### HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty

### PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence—Health-building during sleep—Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

### EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease—Killing emotions—Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.,

### THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master—Trifles—Courage—Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

### THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement—The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

**Special Indian Edition Rupee 1-8-0 each**

## V. KALYANARAM IYER & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)